...ண்ட
...க்கியம்



இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பி
பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்கு
தும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புறு
நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் ம

டாக்டா...
பாண்ட லேகியம...
றது. கணச்சூட்டுகை...
கம் வராதபடி தடுக்கவும்...
சிக்கல் நீங்குகின்றது. ஆன...
மாதா மாதம் 10 பவுன் அனுப்ப...
ஆள்வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேக...

M. C. நஞ்சுண்டராவ். B. A, M B...

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களு... பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையானி ம... 'டனுக்கு' என்னும் ஊருக்கும் ஜில்லா முனிசீப்பாக இருக்கில... தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தை பெரு... நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகி... யம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிர காச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்'...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	ஸ்ரீமுகஞு புரட்டாசிமீ 1௳	இதழ்
4	1933ஞு செப்டம்பர்மீ 16௳	9

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார, சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்தில் பற்றுவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

—ஸ்ரீ. இராமலிங்கர்

குறிப்பு:—'தமிழர'சில் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டனவாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.

சென்னை-600 008

ஆசிரியர் குறிப்புக்கள்

அந்தோ வைதீகமே!

வைதீகத் தலைவர் எம். கே. ஆச்சாரியார் சீமை சென்றிருப்பதை அன்பர்கள் அறிந்திருப்பார்கள். அவர் அங்கே சாதிக்கப் போன காரியமும் தெரிந்தே இருக்கும். 'ஹரிஜனங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்; ஆண்டவனைக் காண அவர்களுக்கும் உரிமை தர வேண்டும்' என்று சொன்னால் 'இது சாஸ்திர விரோதமானது, இதனால் தருமம் அழிந்துவிடும்' என்று கூக்குரல் இடும் அவர், அந்த சாஸ்திரப்படியே 'பிராமணன் கடல் கடந்து செல்வது பெரும் பாவமாகும்' என்றிருக்க எவ்வாறு சீமைக்குப் போனார்? அதோடு சாஸ்திரத்திற்கு விலக்கான ஒரு வகுப்பாரிடம் இவர் மனு செய்து கொள்வது 'தர்ம' விரோத மல்லவா? என்பதை எண்ணிப் பாருங்கள். 'சாஸ்திரம்' 'தருமம்' என்பவற்றின் பெயராலே வைதீகத் தலைவர் செய்யும் திருவிளையாடல்களைக் கவனியுங்கள்.

இவை நிற்க, இப்போது ஆச்சாரியார் சொல்லியுள்ள மற்றொரு புரட்டையும் நோக்குங்கள். அவர் சீமையில் ஒரு பத்திரிகை நிருபரிடம் 'நான் இந்தியா சென்றதும் எனது பாவ பிராயச்சித்தத்திற்காகப் பதினைந்து நாட்கள் கங்கை நதிக் கரையில் இருக்கப் போகிறேன்' என்று சொல்லி இருக்கிறார். தெரியாமல் செய்த தவறுக்கே பிராயச்சித்தம் உண்டு. தெரிந்து செய்கிற தவறுகளுக்குப் பிராயச்சித்தம் கிடையாது. அப்படியிருக்க ஆச்சாரியார் தாம் சொல்லுகிற சாஸ்திரத்திற்கு விரோதமாகத் தாமே தெரிந்து சீமைக்குப் போய்ச் சாஸ்திரத்திற்கு விலக்கான ஒரு பிரிவினருடன் குலவி விட்டு இப்பொழுது 'நான் இந்தியா சென்றவுடன் கங்கைக் கரையில் இருந்து பாவத்திற்குப் பரிகாரந் தேடப் போகிறேன்' என்று சொல்வது எப்படிப் பொருத்தமாகுமென்று கேட்கிறோம். ஆச்சாரியார் சொல்வதிலிருந்தும் செய்வதிலிருந்தும் அவர் எவ்வளவு உண்மையுடையவரென்பதையும், அவர் சொல்லும் சாஸ்திரம் எவ்வளவு நம்பத் தக்கதென்பதையும் நீங்களே எண்ணிப் பாருங்கள்.

இருவர் விடுதலை

மகாத்மாவைத் திடீரென்று சிறை செய்வதும் பிறகு எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்வதும் இந்தச் சர்க்காருக்குச் சாதாரணமாகப் போய்விட்டது. மகாத்மா சிறையிலிருப்பதையும் வெளியிலிருப்பதையும் ஒன்றாகவே நினைக்கிறார். இப்போது அவர் விடுதலை

யடைந்ததற்காகச் சிறிதும் சந்தோஷப்படவில்லை. ஆயினும் அவர் சிறையி லிருந்து வெளி வந்தவுடன் விடுத்துள்ள செய்தி யொன்றில் 'நான் சிறை செல்வதையும் மீண்டும் உபவாச மிருப்பதையும் விட அதிக விருப்பத்துடன் சமாதானத்தையே நாடுகிறேன்' என்று குறிப்பிட் டிருக்கிறார். எனவே அடிகள் சமாதானத்திற்குத் தாம் எப்பொழுதும் தயார் என்பதைக் காட்டிக்கொண்டே வருகிறார். நல்ல காலமாக இந்தச் சந்தர்ப்பத்தில் வீரர் பண்டித ஜவஹர்லாலும் தம் தாயினுடைய நோயின் காரணமாகத் தமது தண்டனைக் காலத்திற்கு முன்னரே விடுதலை யடைந்து வெளி வந்திருக்கிறார். காந்தி அடிகளும் நேரு வீரருமான இந்தியாவின் இரண்டு ஜோதிகளும் வெளியி லிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை வில்லிங்டன் சர்க்கார் நல்ல விதமாக உபயோகப்படுத்திக் கொண்டால் நன்மையாக இருக்கும். ஆனால் என்ன செய்யுமோ? நாம் இப்பொழுது எவ்வாறு சொல்லக் கூடும்?

சொந்த மகனும், சுவிகார மக்களும்

பாரத தேவியின் இணை இல்லாப் புத்திரர் மகாத்மா காந்தி தமது அன்னையின் விடுதலைக்காக உப்பு நீர் அருந்தி உண்ணா விரதங்கள் இருந்து வாடுகிறார்.



ஆனால் சுவிகார மக்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு வர்க்கத்தார் 'இந்தியா' வாகிய இனிய ரொட்டியை மேலும் மேலும் துண்டு துண்டாக்கி உண்டு உண்டு களிக்கின்றனர். எல்லாம் காலத்தின் கோலம் போலும்.

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்

[தண்டமிழ்த் தொண்டன்]

சீரும் சிறப்பும் வாய்ந்த சோழமண்டலத்திலே புலியூர் எல்லைக்கு அருகே மருதூ ரென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் கருணீக குலத்திற் றோன்றி மிகுதியும் சிவநேசம் பூண்டு பரிசுத்த மனதுடைய இராமைய பிள்ளை யென்னும் பெரியா ரொருவ ரிருந்தனர்; அவர்க்குக் காலகதியால் மனைவியர் ஐவர் தேகவியோகமாயினர். எவ்வாழ்க்கையினும் இல்வாழ்க்கையே சிறப்புடைத் தென்பது கருதி பொன்னேரி என்னுங் கிராமத்தில், சின்னம்மை என்னும் பெண்ணணங்கைத் தமக்கு ஆறாந் தாரமாக வரித்தனர். இவ்விருவர்க்கும் சபாபதி பிள்ளை, பரசுராமப் பிள்ளை என்னும் ஆண் மக்க ளிருவரும், சுந்தரம்மாள், உண்ணாமுலை யம்மாள் என்னும் பெண்மக்க ளிருவருமுண்டாயினர்.

இராமைய பிள்ளை யவர்கள் அவ்வூர் கணக்குப் பார்ப்பதினாலும், கல்வி பயிற்றுவதினாலும் பொருள் தேடி இல்வாழ்க்கையை நடத்தி வருநாளில் 'தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' என்பதொக்க, ஓர் சிவயோகியார் திருவருளால் சின்னம்மையார் கருவுற்று, (கலி 4925-இல் நிகழும் சுபானுஹு தக்ஷிணாயனம் வருஷருது புரட்டாசிமீ 21உ பூர்வபக்ஷம் துதியை ஆதிவாரம் உதயாதி $29\frac{1}{2}$ மீன லக்கினம் சித்திரை நக்ஷத்திரம் 4-ஆம்கால் துலாவிராசி கூடிய சுபதினத்தில்) 1823ஹு அக்டோபர்மீ 5உ ஞான சூரியன்போல் ஓர் ஆண்மகவை ஈன்றனர். தெய்வ கடாக்ஷத்தால் வந்த இப் பிள்ளைக்கு இராமலிங்கம் என்னும் பிள்ளைத் திருநாமம் சூட்டினார். சின்னாளில் இராமைய பிள்ளை பரலோகம் செல்லலும், சபாபதி பிள்ளை தம் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து காஞ்சீபுரம் - மஹாவித்வான் சபாபதி முதலியாரவர்களை அடுத்துக் கல்வி பயின்று, பின் ஈண்டுள்ள ஓர் பாடசாலையில் உபாத்தியாயரா யிருந்து குடும்ப போஷணை செய்து வந்தனர். இவ்வாறு தமயன் போஷணையில் வளர்ந்துவரும் இராமலிங்கம் மூவாண்டு தொடங்கிச் சிறு வயதுக் கேற்பப் பல விளையாட்டுகளைக் காண்பார் அதிசயித்து மகிழ விளையாடுவாராயினர்.

பிள்ளையவர்கட்கு ஐந்தாண்டு வரலும், தமயனார் ஓர் அந்தணர் பால் வித்யாரம்பம் செய்து பின்னர்த் தாமே போதகாசிரிய ராயினர். காளேறலும் பிள்ளை யவர்கட்குப் பூர்வ வாசனைப் பழக்கத்தால்

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள்

கல்வி பிறர் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியமின்றித் தானாகவே நிறைந்து ததும்புவதாயிற்று. ஆயினமையின், குருலிங்க சங்கமபத்தி மீதூர குமாரக் கடவுளை உபாசிக்கத் தலைப்பட்டனர். இவ்வமயத்துப்



வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை

பிள்ளையவர்கள் சென்னைக் கந்தப்பெருமானார் மீதும், திருத்தணிகையம் பதி மேவும் குருநாதனும் சிவசுப்பிரமணியக் கடவுள் மீதும் தோத்திர ரூபமாகத் தெய்வமணிமாலையும், திருத்தணிகைப் பதிகமும் ஒதினார். அவரது அன்பு கனித் தெழுந்த இப்பாக்கள் படிப்போர் போரது மனத்தைக் கனிவித்தலால் இவை தெய்வவாக்கே யாமென்று யாவரும் பாராயணம் செய்வாராயினர்.

அங்ஙனம் நிகழுநாளில், பிள்ளையவர்கட்குத் தம்மைப்பற்றிய விசாரந் தலைப்பட்டு 'பிறப்பெனும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும், செம்பொருள் காண்பதறிவு' என்னும் ஆப்த வாக்கியத்திற் கிலக்காகி, உலகத்தினது அசத்துத் தன்மையையும், யாக்கை நிலையாமையையும் நன்கோர்ந்து, தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் காணவேண்டுமென்னும் அவா மேலிட, திருவருண் முன்னின் றிழுக்க, திருவொற்றியம்பதிக் கேகி, தியாகப் பெருமானைத் தொழுது அப்பெருமான் மீது அன்பும் ஆராமையுங்கொண்டு பல அற்புதப் பாக்கள் வகுத்துப் பரவசமடைந்திருந்தனர்.

அவ்வாறொழுகு நாளில், தமயன்மார்களும் தமக்கைமார்களும் பிள்ளையவர்கட்குத் திருமணம் செய்யக் கருதிப் பிள்ளையவர்களை வேண்டலும், அச்செய்கைக்கு அவர் பல நாளும் உடன்படாராகியும், உறவினர் தமக்கையார் புத்திரியை விவாகம் செய்வித்தனர். ஆயினும் அவர் அந்நெறி நில்லாது அலைவற்ற ஞானயோக சமாதியுற்றிருந்தனர். இவ்வாறுள்ள அவரது பெருமிதத்தைக் கண்ணுற்ற பலர் அவர்பாலெய்தி, அவர்தமைப் போதகாசிரியராகவும், ஞானாசாரியராகவும் கொண்டு இலக்கண இலக்கியங்களிலும் ஞானசாத்திரங்களிலுமுள்ள மிக்க நுண்ணிய பொருள்களைக் கேட்டுத் தெளிவாராயினர். அத்தறுவாயில் தம்மையீன்ற சின்னம்மை சிவபத மடைதலும் தமயனார் பரசுராமப் பிள்ளை தேக மெலிவுற்றுப் பிணியால் வருந்துவதுணர்ந்து அவரைச் சிதம்பர தலங்கொண்டு சென்று, தில்லை நடராஜபதியைத் தரிசிக்க எண்ணங்கொண்டு, அடியார்களுடன் அங்குச் சென்று சிற்சபேசனைத் தரிசித்து, ஆநந்தக் கண்ணீர் வாரப் பலப்பலவாகப் பாடி யாடித் துதித்துப் பரவச மடைந்து, சுற்றுப் பக்கங்களிலுள்ள திவ்விய க்ஷேத்திரங்களைத் தரிசித்து ஆங்காங்கும் சிவபிரான்மீது பாமாலை சாற்றுவாராயினார். பின்னும் சிதம்பரத்திற் கெழுந்தருளி ஆனந்த நடன தரிசனம் செய்து தமது பிறப்பிடமாகிய மருதூரை யடுத்த கருங்குழிக்கு வந்து பிள்ளைக்குச் சமாதி கிரியை முதலியன முடித்துச் சிலநாளங்கிருந்து ஞானயோக சமாதி வழியே நின்றார். அக்காலத்தில், பக்தி மார்க்கமே சிறந்ததென்றும், கொல்லா விரதமே மேம்பட்டதென்றும், பலருக்கும் நன்கு போதித்து நல்வழி யடையச் செய்தனர். இதுவேயுமன்றி, அவரது மேம்பாட்டைக் கேள்வியுற்ற கற்றறிவாளர் பலரும் பொறாமைகொண்டு பிள்ளையவர்க



வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை



சித்தி வளாகத் திருமாளிகை கோடிட்ட திரு அறையில்தான் சுவாமிகள் திருக்காப்பிட்டுக்கொண்டனர்.

ளிடம் வாதிடலும் அன்னோர் யாவரையும் அருள்வசத்தால் வென்று அவரை நன்னெறி யடைவித்தனர்.

இங்ஙனமாக சன்மார்க்க நெறி வழுவாது அருள்வழி நிற்றலும், பிற்றைநாளில் சிதம்பரம் நான்கு கோபுரமு மொருங்கே தோன்று மெல்லையாகிய வடலூர் அல்லது பார்வதிபுரம் என்று வழங்கிவரும் பதியின்கண், தமது 45-வது வயதாகிய பிரபவஸு வைகாசிமீ 11வ குருவாரத்தன்று ஓர் ஆலயப் பிரதிஷ்டை செய்வித்து அங்கு ஞானசபை ஒன்று அமைத்து அதற்கு உத்தரஞான சிதம்பரமென மகுடஞ்சூட்டி அச் சபைக்குக் கற்பூர ஆராதனை நிதமுஞ் செய்விக்கும்படிக் கட்டளையிட்டுத் தாம் மேட்டுக் குப்பத்தில் தனிமையாய் ஓரிடத்தில் ஞானசமாதி கூடியிருந்து கலியாப்தம் 4978-இல் நிகழும் ஸ்ரீமுகவூ தைமீ 19வ சுக்கிரவாரம் புனர்பூச நக்ஷத்திரங் கூடிய பூர்வ ராத்திரியில் சின்மாத்திர சகஜ சமாதியில் அசைவற நின்று சற்குருவைச் சிந்தித்து தாமமர்ந்திருந்த அறையை மூடிப் பூட்டுவித்து மவுனநிட்டை கூடி திருக்காப்பிட்டுக் கொண்டனர்.

வள்ளலார் பிறந்த நாள் விழா

மேற்கண்ட சரித்திரத் தலைவரான ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா என்னும் தெய்வத் திருமறையை அருளி நாட்டிற்கு ஆற்றியுள்ள தொண்டை—காட்டியுள்ள சன்மார்க்க நெறியை மக்கள் மறக்கவே முடியாது. தற்பொழுது தமிழ் நாட்டில் ஒரு புதிய சக்தி—சீர்திருத்த வேகம் தோன்றி யுள்ள தென்றால் அதற்குக் காரண கர்த்தர் இவ் வள்ளலாரே யாவர். இத்தகைய செயற்கரிய செயல் புரிந்த பெரியார் இராமலிங்கரது 111-வது பிறந்த நாள் விழா நாளது ஸ்ரீமுக ஆண்டு புரட்டாசித் திங்கள் 5-ஆம் நாள் (21-9-33) வியாழக்கிழமை யன்று வருகிறது. சுவாமிகளது வழியைப் பின்பற்றி இயன்ற வரையில் சிறந்த முறையில் உண்மையான வேலை செய்து வரும் சென்னை, சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் தங்கள் வழக்கம்போல் அன்றைய தினத்தில் ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு ஆகார மளிக்கவும், திருவருட்பா ஓதவும், சன்மார்க்க சொற்பொழிவுகள் புரியவும் சென்னைத் தொண்டை மண்டலம் கலாசாலையில் ஏற்பாடு செய்திருப்பதாக அறிந்து அகமகிழ்கிறோம். இது போலவே ஒவ்வொரு சிறு ஊரிலும் ஸ்ரீ இராமலிங்கரது திருநாளைக் கொண்டாட வேண்டு மென்று கோருகிறோம். ஆனால் அன்று மட்டும் உணவு உதவி, உபந்யாசம் செய்து மற்ற நாட்களில் அடிகளது அறவுரைகளை மறந்து வாழ்த லாகாது. ஒவ்வொருவரும் தங்கள் தினசரி வாழ்க்கையில் வள்ளலார் காட்டிய வழிகளைப் பின் பற்றி நடக்க முயல வேண்டும்; முயன்று வெற்றி அடைய வேண்டும். அப்பொழுதுதான் அவரது திருநாளைக் கொண்டாடியது பொருத்தமும் அருத்தமு முடையதாகும்.

—ஆசிரியர்



சகல நோய்களையும் தீர்க்கவல்ல—சாலை தீர்த்தம்



சகல நோய்களையும் தீர்க்கவல்ல—கேணி தீர்த்தம்

சுவாமிகளுக்கு அடிமைப்பட்ட தெய்வீக மாமரம்

சங்கீத வித்வான்

சித்தூர் - திரு. சுப்பிரமணியம்

[திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர்]

சென்னை, அரசாங்கத் தலைமைத் தமிழ் மொழி பெயர்ப்பாளரும், தொண்டைமண்டலம் துளுவ வேளாளர் உயர் கலாசாலைக் கௌரவகாரியதரிசியாரு மாகிய ராவ்சாகிப் C. N. சரவண முதலியார் B.A., அவர்களது அருமைத் திருமகள் திருநிறை செல்வி சகதாம்பிகைக்கும் திருநிறை செல்வர் E. கன்னியப்பர் பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும் சென்ற 1–9–33 அன்று காலை சென்னைப் புரசைப்பாக்கம் கங்காதரேஸ்வரர் கோவில் வீதியில் உள்ள 11-வது எண்ணுள்ள 'ஸ்டிரா தெண்டேல்' என்ற அழகிய 'பங்களா'வில் வெகு விமரிசையாக நடைபெற்றது. விவாகத்துக்கென அமைக்கப்பட்டிருந்த தசாவதாரத் திருமணக் கொட்டகை மிக விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பல அரசியல் அறிஞர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பிரபல பொது மக்களும் ஆயிரக் கணக்கில் விஜயஞ்செய்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

அன்று மாலையில் குறிப்பிட்டிருந்தவாறு 5½-மணிக்குத் தென்னிந்திய சங்கீத சிரோமணி எனத் தகும் சித்தூர்—சுப்பிரமணியம் அவர்களின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. யான் அதற்கு முன்னர், பல சங்கீத வித்வான்களின் பாட்டுக்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அன்றே முதன் முறையாகச் சித்தூர்—சுப்பிரமணியம் அவர்களின் பாட்டுக்களைக் கேட்டேன். சித்தூர்–சுப்பிரமனியம் அவர்களின் பாடும் முறை உயர்தரமான ஒரு தனிப்பட்ட முறையெனவே சொல்ல வேண்டும். அவர் இராகங்களை ஆரம்பிக்கும் முறையும் முடிக்கும் முறையும் மிக மிக அற்புதமானது. அவர் எந்த இராகத்தை எடுத்தாலும் வேறு இராகக் கலப்பு ஒரு சிறிதுமின்றிப் பாடுவது வியக்கத் தக்கதே. அவர் பாடும்போது அவரிடம் மற்றப் பாடகர்களிடம் காணப்படும் அங்க சேஷ்டைகள் எவையும் காணப்படவில்லை. பாடும் போது அவரது தோற்றம் சிறந்த நிலையிலேயே காணப்படுகிறது. பக்க வாத்தியக்காரர்களைத் திணரச் செய்து அவர்களைக் குறைவு படுத்த வேண்டுமென்ற கெட்ட குணம் அவரிடம் சிறிது மில்லை யென்று அறிகிறேன்.

தமிழ்ப் பாட்டு அவரிடத்தில் ஒரு தனிப் பெருமை பெற்று விளங்குகிறது. காலஞ் சென்ற திருச்செந்தூர்—சண்முக வடிவுக்குப் பிறகு தமிழ்ப் பாட்டுக்களைச் சிறப்பாகப் பாடுகிற பாடகர்களை நான் பார்க்கவில்லை. ஆனல் சித்தூர்—சுப்பிரமணியம் அவர்கள் பாடிய பல திருப்புகழ்களையும், 'கூவுது பார் குயில்' என்பது போன்ற சிறந்த சில பாடல்களையும் கேட்ட பின்னர் எனக் குண்டான ஆனந்தத்திற் களவில்லை. ஸ்ரீமதி சண்முக வடிவுக்குப் பிறகு சித்தூர்—சுப்பிரமணியம் அவர்களிடத்தில்தான் தமிழ்ப் பாட்டுக்கள் சிறப்புற்று விளங்குகின்றன வென்று நான் உறுதியாகச சொல்வேன்.

மற்றப் பாடகர்களைப் போலவே திரு. சுப்பிரமணியம் அவர்களும் தெலுங்கு பாட்டுக்களைத்தான் முன்னதாகப் பாட வேண்டுமென்று கருதி இருக்கின்ருரெனத் தெரிகிறது. இனி அவ்வாறின்றி தமிழ் மக்கள் வீட்டில் தமிழுக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்கும்படி சுப்பிரமணியம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீ. தியாக ஐய சுவாமிகளுக்கு நன்றி செலுத்த வேண்டுமானல் ஆரம்பத்தில் அவர்மீது சிஷ்ய வணக்கமாக ஒரு கீர்த்தனம் மாத்திரம் பாடுவதே பொருத்த மாகும். நிற்க. சங்கீத சம்பந்தமான மற்ற விஷயங்களில் சுப்பிரமணியம் அவர்கள் தலை சிறந்து விளங்குகிருர்க ளென்பது உறுதி. இத்தகைய சிறந்த பாடகருக்குத் தமது தவப் புத்திரியின் திருமண விழாவில் ஆதாவளித்த திருவாளர். C. N. சரவண முதலியார் அவர்களின் உயர் குணம் போற்றத் தக்கதாகும்.

கமலா:—நான் ஆண் பிள்ளைகளைப் பார்த்தால் என் கணவர் என்மீது சீறி விழுகிருர். நான் என்ன செய்யட்டும்?

விமலா:—நீ பெண்பிள்ளைகளை உன் வீட்டுக்கு வரும்படி அழை. அப்பொழுது அவர் பார்த்தால் அவர்மீது நீ சீறி விழு.

* சீமை சென்று வந்த சினேகிதர்

[திரு. S. கோதண்டராமன் B. A., B. L.,]

'சீனிவாசன் வந்து விட்டார். அவர் தங்களைப் பார்க்கவேண்டுமென்று தெரிவித்தார். உங்கள் வீட்டுக்குப் போகலாமென்று என்னையும் கூப்பிட்டார். வேலை மிகுதியால் நான் அவரை அழைத்து வர முடியவில்லை. நாளை அவரை ரங்க விலாசத்தில் பார்க்க முடியுமா' என்று சென்ற வெள்ளிக்கிழமை மாலை எனது நண்பர் ஒருவர் கேட்டார். 'ஆஹா மெத்த சந்தோஷம். அவசியம் அவரை நாளைக்குப் பார்ப்பேன்' என்றேன்.

மறு நாள் மாலை ஆறு மணிக்கு டிராம் ஏறி ராயப்பேட்டை ரங்க விலாசத்திற்குச் சென்றேன். வாயிலில் நின்றபடியே, 'திருவாளர் சீனிவாசன் இருக்கிறாரா' என்று வினவினேன். யாரோ தம்மைத் தேடி வந்திருப்பதை உணர்ந்து திரு. சீனிவாசன் வெளியே வந்தார். என்னைக் கண்டதும் 'வாருங்கள், வாருங்கள். நாம் மாடிக்குப் போகலாம்' என்று சொல்லிக் கொண்டே அன்பின் மிகுதியால் என் கையைப் பிடித்து மாடிக்கு இழுத்துச் சென்றார்.



சீமையின் மூன்று வருட வாழ்க்கையினால் ஏற்பட்ட பலனைக் கண்டேன். அவர் முன்னையைக் காட்டிலும் சற்று தெளிந்த

---

* இக்கட்டுரை இங்கிலாந்தில் ஆங்கிலேயர் எங்ஙனம் வாழ்க்கையை நடாத்தி வருகின்றனர் என்பதை நமது நேயர்கள் அறியும் வண்ணம் எழுதப்பட்டது.

முகத்தை யுடையவராயும், சந்தோஷ மிகுதியு முள்ளவராயும் காணப் பட்டார்; சற்று வளர்ந்தும் இருந்தார்; சுருங்கச் சொல்லுமிடத்து கம்பீரமுள்ள ஓர் வாலிபராகத் திரும்பி வந்திருந்தார்.

இருவரும் மாடியி லிருந்த ஒரு கட்டிலின் மீது உட்கார்ந்தோம்; சிறிது தாகசாந்தி செய்து கொண்ட பின்னர், மிகுந்த ஆர்வத்துடன் க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டோம். பின்னர் 'ஆங்கில வாழ்க்கையைத் தாங்கள் கண்ட விதம் சற்று சொல்ல முடியுமா' எனக் கேட்டேன். அவர் 'ஆஹா' என்று பின் வருமாறு சொல்லலுற்றார்.

இங்கிலாந்தில் கல்வி அதிகமாகப் பரவி இருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாதவர்களைக் காண்ப தரிது. ஒவ்வொருவரும் பத்திரிகை படிக்கின்றனர். தெருக்கள், ஹோட்டல்கள், மற்ற வீடுகள் எல்லாம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட் டிருக்கின்றன. குப்பையையோ, கிழிந்த காகிதத்தையோ தெருவில் ஒருவரும் கொட்ட மாட்டார்கள். வீட்டி னுள்ளும் அதற்கென்று பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ள கூடைகளில்தான் கொட்டப்படும். கண்ட விடங்களில் மல ஜல பாதை ஆகிய ஆபாசங்கள் செய்வதில்லை.

ஜனங்கள் எல்லோரும் ஒருவருக் கொருவர் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்ளுகின்றனர். வேலைக்காரரை அடிமைகள் போல் நடத்துவதில்லை. மிகவும் கண்ணியமாகவே நடத்துகிறார்கள். வேலைக்காரர் ஏதாவது கொண்டு வந்தால் 'வந்தனம்' என்று சொல்லியே அதை வாங்குவார்கள். எல்லா வேலைக்காரர்களுக்கும் வாரத்திற்கு ஒன்றரை நாள் விடுமுறை உண்டு. சர்க்காரால் இதற் கென்று பல விதிகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன.

சர்க்கார் ஜனங்கள் நன்மையைப் பற்றி மிகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ளுகின்றனர். கட்டாயக் கல்வி முறையினால் ஏழு வயது முதல் பதினாறு வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது; மத்தியானம் ஆகாரம், புஷ்டியுள்ளதாகப் பள்ளிக் கூடத்திலேயே கொடுக்கப்படுகிறது. அதற்காக ஏழைகளிடம் பணம் வாங்கப்படுவதில்லை. பணக்காரர்களிடம் மாத்திரமே பணம் வாங்கப்படுகிறது. வேலை யில்லாமல் திண்டாடுபவர்களுக்கு, பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஜனங்கள் மிகவும் ஒழுங்காக நடந்து கொள்கிறார்கள். டிராம் வண்டிகளிலும் ரயில் வண்டிகளிலும் இறங்க வேண்டியவர்கள் இறங்கிய பின்னரே, ஏற வேண்டியவர்கள் ஏறுவார்கள். சினிமாக்களிலும் நாடக சாலைகளிலும் டிக்கட்டு வாங்குவதற்கு அடிதடி சண்டை கிடையாது. டிக்கட்டு வேண்டுவோர் ஒருவர் பின் ஒருவராக நிற்கிறார்கள்.

முன்னால் வந்தவர் வாங்கினவுடனேதான் பின்னால் வந்தவர் வாங்க வேண்டும் என்ற சம்பிரதாயம் உண்டு. இதை (Formation) கியூ மாதிரி நிற்றல் என்று சொல்கிறார்கள்.

பெண்கள் மிகவும் தாராளமாக ஆண்களுடன் பழகுகிறார்கள். பெண்கள் செய்யாத வேலை இப்போது ஒன்றுமில்லை என்று சொல்லலாம். இவ்விதம் பெண்கள் பழகுவதனால் கற்பு நிலைக்குப் பங்கம் ஏற்படலாம் என நினைக்கலாம். அவர்கள் கற்பு என்பதைப் பற்றி அவ்வளவு கவலைப் படுவதாகத் தெரியவில்லை. ஆனால் கற்புடைய பெண்டிர் இல்லையெனச் சொல்ல முடியாது. நல்லவரும், கெட்டவரும் எங்கும் உண்டல்லவா? என் மட்டில் ஒரு ஆங்கிலேய மனைவியை மிகுந்த சந்தோஷத்துடன் மணந்து கொள்வேன்.

ஜனங்கள் இரசாயன சாஸ்திரத்தில் (Science) நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். இரசாயன சாஸ்திரத்தினால் ஏற்பட்ட உதவிகளால் அவர்கள் வாழ்க்கை மிகவும் மேன்மையான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. ஜனங்கள் மிகவும் சந்தோஷமாகவே இருக்கின்றனர்; வாழ்க்கையின் இன்பத்தை முற்றும் அனுபவிக்கின்றனர். எங்கும் மலர்ந்த முகங்களே தென்படுகின்றன', என்று சொல்லி முடித்தார்.

நான் 'ஆங்கிலேய வாழ்க்கையின் முக்கிய தத்துவம் அல்லது அடிப்படையான நோக்கம் என்ன?' என்று கேட்டேன்.

அதற்கு அவர் 'வாழ்க்கையின் இன்பத்தை சம்பூர்ணமாக அனுபவிக்க வேண்டுமென்பதுதான் அவர்கள் நோக்கம். அஃதொரு உயர்ந்த நோக்கமாகக் காணப்படாவிடினும், நாம் அதைக் குறைகூற முடியாது' எனப் பதிலளித்தார்.

பின்னும் நான் 'பணமில்லாவிடில் ஆங்கிலேயரில் எவனாவது வாழ்க்கையை நடத்த முடியுமா' என்று கேட்டேன். 'முடியாது. முடியாது. பணமில்லாமல் ஆங்கிலேயன் ஒருவனும் வாழ மாட்டான். அவன் தற்கொலை செய்து கொள்ளுவான்' என்றார்.

அப்போது மணி எட்டடித்தது. மழை சற்று தூறிக் கொண்டு இருந்தது. நண்பரிடம் மறுபடியும் வந்து பார்ப்பதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தேன். போகும் வழியில் 'சீமை வாழ்க்கையில் நாம் கொள்ள வேண்டிய பலவும், தள்ள வேண்டிய சிலவும் உண்டு' என்று சிந்தித்துக்கொண்டே வீடு சென்றேன்.

இரு தலைக் காதலும், ஒரு தலைக் காமமும்

மேல் படங்கள்:—1. இருவரும் கண்ணோடு கண்ணோக்குகின்றனர். 2. காதல் வெள்ளத்தில் மூழ்கிக் களிக்கின்றனர்.

கீழ்ப் படங்கள்:—1. ஒருவன் தான் மட்டும் ஒருத்தியை ஆசிக்கின்றான். 2. அவளால் நிராகரிக்கப்படுகின்றான்.

உயிரைக் கொடுக்கும் உழுவலன்பு

[திரு. R. சிவேசகம்]

சீநக்க ராயர் இறந்த ஞான்று, தமது உயிரை உடனே விடத் துணிந்த பொய்யா மொழிப் புலவரின் உழுவ லன்பின் தன்மையைக் கேட்போர் கண்ணீருகுப்பர்; கல்மனமும் கசிந்து உருகுவர். ஏனெனின், சீநக்க ராயரிடம் அவருக் கிருந்த அன்பு அத்தன்மைத்து.

சோழ வளநாட்டை ஆண்டுவந்த ஒரு சோழ வேந்தனுடைய அமைச்சரே, நமது சீநக்க ராயர். பொய்யா மொழிப் புலவரோ, பல ஊர்களையும், சுற்றிக் கொண்டு, சோழ நாட்டை யடைந்தனர். புலவர் களோ பல விடமும் சென்று தமது புகழை நிலை நிறுத்தும் பெற்றிய ரல்லரோ! எக் காலத்தும் புலவர்கள் ஓரிடத்திலேயே வதிந்து உறைபவ ரல்லர். அதனை யொப்ப, நமது புலவர் பெருமானும், சோழ வளநாட்டை யடைந்தபோது, அவ்வரசன் அமைச்சராய சீநக்க ராயர்பால், அவரை யறியாமலே அவர் தம் அன்பு சென்றது. முன் பின் தெரியாத ஒருவரிடம், மற்றொருவருக்குக் கண்டவுடன் இயற்கையாக எழும் அன்பே உண்மை யன்பெனப்படும்.

> 'புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
> நட்பாங் கிழமை தரும்'

என்பதும் நாயனர் கூற்றல்லவா?

ஆகவே, பொய்யா மொழிப் புலவரும், சீநக்கராய முதலியாரும் உடலும் உயிரும் போல் நட்புரிமை பாராட்டத் தலைப்பட்டனர். அவர்களுடைய நட்போ ஒருவரை விட்டு, ஒருவர் பிரிய முடியாததா யிருந்தது. நட்பின் தன்மையோ, பேயோடு பழகுறினும் பிரிவ தரிதாகுமன்றே! ஆதலின் தேடுதற்குக் கிடையாத திரவியமாக, அவர்கள் அந்நட்பைப் போற்றி வந்தனர்.

இவ்வாறு புலவர் பெருமானும் சீநக்க ராயரும் இடைவிடா நட்புரிமை பூண்டு ஒழுகிவரும் நாளிலே, ஒரு நாளிரவு நேரத்திலே,

புலவரும், சீநக்காராயரும் பள்ளியறையிற் சென்று, ஒரு கட்டிலின்

கண் அமர்ந்து இனிதே அளவளாவிக் கொண்டிருந்தனர். அது சமயம், புலவர் கண்ணுறக்கங் கொள்ள, சீநக்காராயரோ, புலவரை அக் கட்டிலிலேயே படுக்கும்படி விட்டு விட்டு, தமது காரியத்தைக் கவனிக்கும் வண்ணம் வெளிச் சென்றனர். புலவரோ அக் கட்டிலிலேயே படுத்து அயர்ந்து நித்திரை புரிவாராயினர். அதுபோது, சீநக்கராயரின் மனைவியார், தமது படுக்கை யறையிற் சென்று, கட்டிலில் உறங்குவோர் தமது நாயகனாரே எனத் திண்ணமுற வெண்ணி, புலவருக்கருகிலேயே படுத்து உறங்குவாராயினர். சிறிது நேரங் கழித்து, சீநக்காராயர் பள்ளியறை சென்று நோக்க, கட்டிலிற் புலவர் பெருமானும் தமது மனைவியாரும் ஒருங்கே படுத்து உறங்குதலைக் கண்டு, சிறிதும் ஐயங் கொள்ளாது, மனைவியைச் சிறிது அகற்றிவிட்டு அக்கட்டிலிலேயே தாமும் படுத்து உறக்கங் கொள்வாராயினர். வைகறைப் பொழுதில், மனைவியார் துயிலுணர்ந்து, தமது பக்கலில் புலவர் படுத்திருத்தலைக் கண்ணுற்று, திடுக்கிட்டெழுந்து



கட்டிலைவிட்டு அப்பாற் போய்வீழ்ந்தனர். திடுக்கிட்டெழுந்தகன்ற சத்தத்தைக் கேட்டு விழித்த புலவர் பெருமான் சீநக்க ராயரின் மனைவியார் அருகில், தாம் இதுகாறும் உறங்கினதை நோக்கி, கட்டிலை விட்டு இறங்கலானார். இதற்குள் விழித்தெழுந்த சீநக்காராயர், புலவர் கட்டிலை விட்டு இறங்குதலைக் கண்ணுற்று அவர்தம் கையைப் பிடித்து அமர்த்தி 'செல்லக்கிட' எனக் கூறிக்

கட்டிலிலேயே படுத்துறங்குமாறு வேண்டினர். சிறிதும் காலந் தாழ்த்தாது, தமது மனைவியை நோக்கி 'அன்பே, உனது தாதையின் அருகில் படுத் துறங்கியதால் உனக்கு வந்த இழிவு என்ன' என்று தமது உள்ளத்தை வெளியிட்டுத் தமது நண்பரைத் தேற்றுவான் எண்ணினர்.

அக்கணத்தி லிருந்தே, புலவர் பெருமானுக்கும் சீநக்கராய ருக்கும் இருந்த நட்புரிமையானது முற்றி வளரத் தலைப்பட்டது. சீநக்க ராயரின் உயர் குணத்தை எண்ணி யெண்ணி நமது புலவர் பெருமான் உள்ளூற ஆனந்தங் கொண்டனர்; ஆயினும் தமது செய்கையால் சீநக்கரின் மனைவியாருக்கு ஏதாவது இழிவு சம்ப விக்குமோ என்று வருந்தினர். எத்தகைய உயர்ந்தோரையும் உலகத் தார் இழிவு படுத்தத் துணிவரன்றோ? அது போலவே நமது புலவரையும் இழிவாகப் பேசத் தலைப்பட்டனர்.

உலகம் என்றாவது உண்மையை அறியும் என்று புலவரும் மனந் தேறியிருந்தனர். ஆனால் சீநக்க ராயருக்கும் பொய்யா மொழிப் புலவ ருக்கும் இருந்த நட்பு ஒரு சிறிதும் குறைபா டுற்றிலது.

இவ்வா றிருக்கையில் சீநக்க ராயர், தேக அசௌக்கியமா யிருந்து, ஒரு நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தனர். சீநக்க ராயர் அமைச்ச ராதலின், சோழ வேந்தன் சகல ஆடம்பரங்களுடன் அவருக்கு ஈமக் கடனை நடத்த ஏற்பாடு செய்தனன். சீநக்க ராயரின் மனைவியாரோ உடன்கட்டை யேறத் துணிந்தனர். முறைப்படியே சிதைக்குத் தீ மூட்ட ஆரம்பித்தனர்.

அது காலை, சிறிது தூரத்தி லிருந்து ஒருவர் ஓடி வருதலை யாவருங் கண்டனர். அவரு டையநிலையைக் கண்டு யாவருங் கலங்கினர். புல வர் பெருமானின் நிலையோ உயிரை நீத்த உடம்பு என்று சொல்லத் தகும் நிலையில் இருந்தது. சோழ வேந்தன் முதலியோர்

எவ்வளவோ தேற்றியும், மனந்தேறாத புலவர் பெருமான், சோழர் பெருமானை நோக்கி,

‘வாழிசோழ என்வாய்மொழி கேண்மோ,
ஊழி நிலவுஎறி மாளிகை யின்வயின்
கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை
என்று அறிமனைவி நெடிதுதுயில் கொளச்
செல்லக் கிடமின் எனக்கிடந் தருகெனச்
சொல்லிய நண்பன் தனிச் செல்பவனோ
நானும் ஏகுவன் நற்றுணை யவற்கே’

என விரிவாக எடுத்துரைத்து சீநக்க ராயருடன் தாமும் உயிர்விடத் துணிந் திருத்தலை அறிவித்தனர். சோழ வாசன் எவ்வளவோ வேண்டியும் உடன்படாது சிதையினிடம் சென்று, அதனை நோக்கி

‘அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆயிழையோடு
இன்றுநீ வானுலகம் ஏறினாய்—மன்றல்கமழ்
மானேக்கும் வேல்விழியார் மாறனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக் கிட’

என்ற பாடலைக் கூற, உடனே சிதை விரிந்து கொடுக்க, அதனில் ஏறி, யாவருங் காண, யாவர் கண்களிலும் நீர் கொள்ள, அத்தீயி னுக்கு இரையாயினர். இஃதன்றோ உண்மை நட்பு! சீநக்காராயர்பால், பொய்யா மொழிப் புலவருக்கு இருந்த அன்பினை என்னென்பேம்! என்னென்பேம்!! சொல்லவும் நா எழுவதில்லை; எழுதவுங் கை ஓடுவ தில்லை. புலவர் பெருமான் தமது புகழுடம்புடன் இன்றும் விளங்கு கிறார் என்பதில் ஐயம் என்ன! தமிழ் மொழி யுள்ளளவும், அவர் புகழ் நின்று நிலவும் என்பது உறுதிப்பாடன்றோ? ஒரு சமயம் சீநக்க ராயர் அளித்த கட்டுச் சோற்றைப் பெற்று, பொய்யா மொழிப் புலவர், அவரது அன்பினுக்கு வியந்து பாடிய அருந் தமிழ்ச் செய்யுள், பொன்னே போல் போற்றப் படுவதாகும்.

‘அளிகொ ளுந்தொடை யான்அர சைக்குமன்
ஒளிகொள் சீநக்கன் இன்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறு மென்புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.’



சமிக்ஞை சாஸ்திரி

[தமிழாசிரியர். பா. பக்கிரிசுவாமி செட்டியார்]

ஓர் ஊரில் முருகன் என்பவன் வசித்து வந்தான். அவன் எந்த விஷயத்தையும் ஆழ்ந்து ஆலோசிக்கும் குணமுடையவன்.

ஒரு நாள் அவன் இராஜ சபைக்குச் சென்றான். அங்கு அவன் அரசனை நோக்கி 'மன்ன! வெவ்வேறு பாஷைகளைப் பேசுகிறவர்கள், தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பிற பாஷை பேசுகிறவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு, சமிக்ஞை சாஸ்திரத்தை அனைவரும் படித்தறிய ஏற்பாடுசெய்யவேண்டும்' என்று யோசனை கூறினான்.

அரசன் அவனுக்குச் சமாதானமாகத் தன் தலைநகரின் வட பாகத்திலுள்ள ஒரு பாடசாலையில் சமிக்ஞை சாஸ்திரி ஒருவர் இருப்பதாக உரைத்தான். அது கேட்ட முருகன் அந்த சமிக்ஞை சாஸ்திரியைத் தான் காண விரும்புவதாக அரசனிடம் அறிவித்து விட்டு, அப் பள்ளிக்கூடத்திற்குப் போகப் புறப்பட்டான்.

அரசன் தன் வார்த்தை பொய்யாகக் கூடாதெனக் கருதினன். அதனல் அவன் ஒரு சேவகனைத் தான் முருகனிடம் குறிப்பிட்ட பாடசாலைக்கு அனுப்பி, தன் மொழியை எப்படியாவது உண்மையாக்குமாறு பாடசாலைத் தலைமை உபாத்தியாயருக்கு உத்தரவிட்டான்.

முருகன், மன்னன் அறிவித்த பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான். தலைமை ஆசிரியர் அன்புடன் முருகனை வரவேற்றார்; 'சமிக்ஞை சாஸ்திரி நேற்றைய தினந்தான் கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போயிருக்கிறார்' எனக் கூறி ஏமாற்றி விடலாமென்று நினைத்தார். ஆனல் திரும்பி வரும் வரையில் காத்திருந்தாவது அவரைத் தான் கண்டு போக வேண்டுமென்று முருகன் கூறினன்.

தலைமை ஆசிரியர் ஏமாற்ற மடைந்தார். அவருக்கு மற்றொரு யுக்தி தோன்றியது. அவ்வூரில் குரும்பன் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு வேஷம் போட்டுக் கொள்ளுவதில் அதிக ஆசை. அவன் சிறிதும் கல்வி வாசனை இல்லாதவன். அவனுக்கு ஒரு கண் குருடு. தலைமை ஆசிரியர் குரும்பனுக்கு நல்ல உடுப்புகளைப் போட்டு, பாடசாலையில் ஓர் உயர்ந்த நாற்காலியில் உட்கார வைத்தார்; அவன் வாய் திறக்காமல் சமிக்ஞை மட்டும் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்; பிறகு முருகனை அழைத்துப் போய் சமிக்ஞை சாஸ்திரி இவர்தான் என்று குரும்பன் முன் விட்டார்; தாமும் வெகு பய பக்தியோடு கைகட்டி, வாய்பொத்தி குரும்பன் முன் நின்றார்.

முருகன், குரும்பனைப் பார்த்துத் தன் வலது கைச் சுட்டுவிரலை நீட்டினன். குரும்பன் இரண்டு விரல்களைக் காட்டினன். மீண்டும் முருகன் மூன்று விரல்களைக் காட்டவே, குரும்பன் தன் விரல்களை மடக்கிக் கொண்டு குத்தும் பாவனையாகக் காட்டினன். உடனே முருகன், குரும்பனை வணங்கிவிட்டு அந்த மண்டபத்திலிருந்து வெளி யேறினன். அது வரையில் உபாத்தியாயர் குரும்பனது குட்டு எங்கு வெளியாகி விடுமோ என ஏங்கி இருந்தார்.



முருகன் வெளியேறியவுடனே ஆசிரியர் அவனைச் சந்தித்தார். அப்போது 'இந்தச் சமிக்ஞை சாஸ்திரி மிகக் கெட்டிக்காரர். சிவன் ஒருவர்தாம் கடவுள் என்னும் பொருளோடு நான் ஒரு விரலைக் காட்டினேன். ஆனால், சிவத்துடன் சக்தியும் சேர்ந்திருப்பதைத் தெரிவிக்க அவர் இரண்டு விரல்களைக் காட்டினார். நான், சிவன், பிர்மா, விஷ்ணு இம் மூவரையும் குறிக்க வேண்டி மூன்று விரல்களைக் காட்டினேன். அம் மூவரும் ஒன்றுதான் என்பதை அறிவிப்பதற்காகத் தம் விரல்களை அவர் மடக்கிக் கொண்டார். ஆகவே, இவர் சமிக்ஞை சாஸ்திரத்தில் மகா நிபுணர்' என்று முருகன் உபாத்தியாயரிடம் சொல்லி விட்டுத் தன் சொந்த ஊருக்குச் சென்றான்.

குரும்பன் வெகு கோபத்தோடு நாற்காலியை விட்டு எழுந்து வந்தான். உபாத்தியாயர் எதிர்ப்பட்டார். அவரைக் கண்ட குரும்பன் 'ஐயா உபாத்தியாயரே! என்னை அவமானப் படுத்தவா இங்கே அழைத்து வந்தீர்' என்று ஆத்திரமாகக் கேட்டான். உடனே ஆசிரியர் 'என்ன சமாசாரம்' என்று வினவினார்.

'எனக்கு ஒரு கண்தான் இருக்கிறதென்று என்னைக் கேவலப் படுத்த அவன் ஒரு விரலைக் காட்டினான். நான், அவனுடைய இரண்டு கண்களும் என் ஒரு கண்ணுக்குச் சமம் என்பதைக் குறிக்க இரண்டு விரல்களைக் காட்டினேன். அத்தோடு நில்லாமல் அவன் எங்கள் இருவருக்கும் சேர்ந்து மூன்று கண்கள்தா னிருக்கின்றன வென்று அர்த்தமாகும்படி மூன்று விரல்களைக் காட்டினான். வந்துவிட்டது எனக்குக் கோபம். அவன் மூளையைச் சிதற அடித்து விடுவதாக என் முஷ்டியைக் காட்டினேன். அவன் பயந்துகொண்டு ஓடி விட்டான். அவன் இங்கேயே நின்றிருப்பானானால் நான் யாரென்பதை அவனுக்குத் தெரிவித்திருப்பேன்' என்று குரும்பன் கூறினான்.

உபாத்தியாயர் வயிறு வலிக்கச் சிரித்து நடந்த விவரத்தை அரசனுக்கு அறிவித்தார். விஷய முணர்ந்த மன்னன் ஆசிரியருக்குத் தகுந்த வெகுமதிகள் அனுப்பினான்.

சிறுவர்களே, நீங்கள் இக் கதையால் என்ன தெரிந்து கொள்ளலாம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறீர்களா?

'ஹா இந்து சமூகமே!'

[திரு. மு. வெ. நல்லசாமி]

இரவு மணி எட்டு. வானம் கறுத்து இருண் டிருந்தது. மழை 'சோ' வென்று பெய்துகொண் டிருந்தது. இடிகள் வானவீதியில் 'கட கட' வென்று உருண்டு கர்ஜித்தன. மின்னல்கள் 'பளீர் பளீ'ரென்று மேகங்களை வெட்டிக்கொண் டிருந்தன.

ஆலம்பட்டி ஒரு சிறு கிராமம். அக் கிராமத்தின் தென்பாகத்தில் ஏழெட்டு குடிசை வீடுகள் இருக்கின்றன. இங்கேதான் ஹிந்து சமூகத்தினின்று ஒரு காரணமுமின்றி ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஹரிஜனங்கள் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு நல்ல வீடேது? நல்ல தண்ணீரேது? நல்ல வசதி எதுவுமே ஏது? நம் சமூகம் அவர்கள் படும் பாட்டைக் கண்டும் நகைத்துக்கொண்டுதா னிருந்தது.



அக் குடிசைகளில் ஒரு சிறு குடிசைக்குள் அறுபது வயது சென்ற ஒரு கிழவி எலும்பும் தோலுமாய்ப் படுத்திருக்கிறாள். அவள்

புருடன் 'லொக்கு, லொக்கு' என்று இருமிக்கொண்டு ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடக்கிறான். பெய்யும் மழையில் முக்கால் பங்கு குடிசைக்குள் ஒழுகிக்கொண் டிருக்கிறது.

தரை முழுவதும் ஈரம் 'வதவத' வென்றிருக்கிறது. சுமார் இருபது வயதுள்ள பெண்பிள்ளை ஒருத்தி வாடி வதங்கிய இளங்குழந்தையுடன் எலும்புக்கூடோ எனச் சந்தேகங் கொள்ளக்கூடிய மேனியில்—ஆழ்ந்த குழி விழுந்திருந்த கண்களால் வாசற்படியை நோக்கிய வண்ணமா யிருக்கிறாள். அவள் சேலை ஆயிரம் பொத்தலா யிருந்தது. குளிர் அவளது உடலைக் 'கிடு கிடு' வென்று ஆட்டிக்கொண் டிருந்தது. குழந்தையோ ஏக்கம்பிடித்துப் பாலில்லாமல் ஈசன் கருணையை வியந்து அழுதுகொண் டிருந்தது. நனைந்த சுள்ளியால் மூட்டப்பட்ட தீ, சிறிது வெளிச்சத்தையும், அதிக புகையையும் தந்துகொண்டிருக்கிறது. அடுப்பி னருகில் பலஹீனமான ஒரு சிறுமி உட்கார்ந்துகொண்டு, அடுப்பில் கொதித்துக்கொண்டிருக்கும் உலை நீரைப் பார்த்த வண்ணம், 'என்ன? அரிசி வாங்கப்போன அண்ணன் இன்னும் வரவில்லையே? கடைக்காரச் செட்டியார் அரிசி கொடுக்கமாட்டேங்கிறாரோ? என்னமோ தெரியவில்லையே' என்று தன் அப்பனை நோக்கிக் கேட்டாள்.

கிழவன்:—என் கையி லிருந்த ஒரு பணத்தையுங் கொண்டு போனானே? செட்டியார் கிட்டே ஒரு பணம் கடன் சொல்லி, ரெண்டு பணத்துக்கும் அரிசி வாங்கி வரும்படியாச் சொன்னேனே? எப்படி வர்ரானோ?

சிறுமி:—ஐஐயோ! செட்டியார் கடைக்கா போச் சொன்னே! அவருக்குத்தான் பாக்கி முன்னமே நாமே கொடுக்கணுமே? அன்னிக்குச் செட்டியாரு என்ன சொன்னாரு தெரியுமா? 'பறக்கழுதைங்கோ கடன் வாங்கினால் கொடுக்கிற தில்லை. ஒங்க பொவுஷுக்கு வேரே ஆள் வைக்கணுமோ? கொழுத்துப் பூட்டாப்லே இருக்குது பறக் கழுதைங்கோ' என்று ஏசிக் காட்டினாரே? அவரு கடன் கொடுப்பாரா?

அச்சமயம் நனைந்த தேகத்துடன் வீரன் அங்குத் தோன்றினான். அவன் கையில் ஒன்றுமில்லை. வீரன் சொன்னான்: 'என்னை முழுச்சி பாத்தா என்ன பிரயோசனம்? கடவுள்தான் கண்ணைத் திறக்கலியே. நேத்தெபோல இன்னிக்கும் பட்டினிதா. செட்டியாரு கடன் தரமாட்டேனுடாரு! ஐயோ, முதலிலேயே அப்படிச் சொன்னாரா? பணத்தையும் கையிலே வாங்கிக்கிட்டு, 'பழைய பாக்கி சரியாப்போச்சு; ஒட்ரா களுதே!' என்று சொல்லிட்டாரு. எவ்வளவோ கெஞ்சினேன். 'எல்லாம் பட்னி கிடந்து சாகிறோஞ் சாமி' என்று காலில் விழுந்து கும்பிட்டேன். ஒரு நாழிகை நேரம் கெஞ்சினேன். செட்டியார் திட்டிக்கொண் டிருந்தார். கன்னெஞ்சு

செட்டி ஒரு காசுகூடக் கடன் தரமாட்டேனு சொல்லிவிட்டாரு. ஒன்னும் வகை யில்லாமே திரும்பி வந்தேன்.'

அப்போது அவன் கண்களில் கண்ணீர் 'சொட்டு சொட்டு' என்று சொட்டியது. அதுசமயம் அவன் குடும்பம் இருந்த நிலையை நான் எழுதியா உங்களுக்குத் தெரிய வேண்டும். வாசகர்களே, உன்னிக் கவனியுங்கள். உங்கள் உள்ளம் பதைக்கும். கண்ணீர் தானுகவே உங்கள் இளகிய நெஞ்சி லிருந்து வரும்.

பசியின் கொடுமை மிகவும் பெரிது. 'கண்மூடி வழக்க மெலாங் காட்டி நமை யழிப்பார், திட்டுப் பொறுப்போம், சினம் பொறுப்போம் செருப்படியும் குட்டும் பொறுப்போம், சிறைப்படவுங் குழையேயாம், பொய்க்கட்டுப் பொறுக்கோம் பசி பொறுக்கோம்'. என்ன செய்வது!

வீரன் வழி தோன்ருது திகைத்தான். வயது சென்ற அவனது பெற்ருேர்களும், இளந்தங்கையும், அவனது மனைவியும் குழந்தையும் பிடி சோற்றுக்குத் தாளம்போடுவதைப் பார்க்கும்போது அவன் நெஞ்சங் குமுறியது. என்ன செய்வது? மழையும் நின்றபாடில்லை. ஊருக்குள் போய் ஏதாவது ஆண்டைமார் வீடுகளில் கேட்கலா மென்ருல், ஊருக்குள் கொடுக்கிற புண்ணியவான்கள் வீடு ஒன்றிரண்டுதா னிருக்கிறது. அங்கேயும், நேரமறிந்து, நோக்கமறிந்து கேட்டால்தான் ஏதாவது கொஞ்சம் கிடைக்கும். இல்லாவிட்டால், 'பரப்பயல்களுக்கு வேலை இல்லை. எருமைக் கிடாக்கள்மாதிரி யிருக்கிறீர்களே? உங்களுக்கு என்ன வாந்திபேதி வந்துட்டுது? கை நொண்டி, கால் நொண்டியா? உங்க இழவுக்கு வடித்துக்கொட்ட இது தர்ம சத்திரமா! முண்டங்களே' என்ற மொழிகள்தான் கிடைக்கும். இவ்வசை மொழிகள் வீரனுக்குப் புதியனவல்ல. எத்தனையோ நாட்களாக இவ் வசை மொழிகளை வீரன் காதுகள் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போயிருந்தன. இவ்வசை மொழி கேட்பதைவிட, இரண்டு நாளோடு இன்னும் மூன்றுநாள் பட்டினியாவது கிடந்து மடியலாம் என்ற எண்ணம் வீரனுக் குதித்தது. வேலையும் கிடைப்பதாயில்லை. குடும்பத்திலோ ஐந்து பேர்கள். ஐயோ இப்பஞ்சை மக்கள் படும்பாடு நம்மால் சொல்ல முடியாதது.

வீரனுடைய பசிக்கொடுமை அவனைப் பல வழியிலும் இழுத்தது. இரவில் எங்காவது திருடலாமா என்ற நினைவும் வந்தது. மறுகணமே, சே, சே இவ்வளவு நாளாய்ச் செய்யாத கெட்ட வேலையை இனி செய்யக்கூடா தென்று தேறினன். ஒன்றன் பின் ஒன்ருக பல யோஜனைகள் கிளம்பின. பல எண்ணங்களி னிடையே தலையை மேலே தூக்கிப் பார்த்தான். குடிசையில் போட்டிருந்த வளையமும், அதில் தொங்கிய கயிறும் வீரனுக்கு ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கின. அவன் கண்களில் அப்போது ஒரு வித நூதன பிரகா

சம். தோன்றியது. அவன் தன் குழந்தையை ஒரு முறை பார்த்தான். தாயின் மார்பில் பால் இருக்குமென்று உறிஞ்சுவதும், பால் இல்லாமல் ஏமாந்து அழுவதுமாயிருந்த அக் குழவியைத் தூக்கித் தன் மடியில் வைத்தான். குழந்தையின் கண்ணீர் வடிந்த கன்னத்தில் வீரன் பல முறை முத்தமிட்டான்; தனது தாய் தந்தையர் முகங்களையும் மாறி மாறி உற்று நோக்கினன்; குழந்தையைத் தாயின் பக்கத்தில் மெதுவாகப் படுக்கவைத்தான். மூன்று நாள் பட்டினியாகையாலும் அழுது அழுது அயர்ந்ததாலும் அனைவரும் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தனர்.



பொழுது விடிந்து விட்டது. செட்டியாரது கடைக்கெதிரில் பெரிய ஜனக்கும்பல். செட்டியார் கடைமுன் இருந்த வேப்பமரத்தில் வீரன் சவமாய்த் தொங்குகிறான். பலர் பலவிதமாய்க் கூறினர். செட்டியார் மனதிலும் 'ஜில்' என்று சற்று ஈரம் தட்டியது. இச் செய்தி ஹரிஜனச் சேரிக்கு எட்டியதோ இல்லையோ, வீரன் தாயாரின் உயிர் விண்ணுலகடைந்தது. ஆ! ஈசா! உன் திருவிளையாடலைக் காணும்போது என் மனது பித்தம் பிடித்துவிடும்போலிருக்கிறதே!

நாட்கள் சென்றன. கவலையால் வீரன் மனைவியும், தகப்பனும் காலகதியடைந்து விட்டனர்.

வீரனது தங்கையால் வளர்க்கப்பட்ட வீரனுடைய குழந்தைக்கு இப்போது வயது ஏழு. அழகன் என்ற அப் பையன் இப்போது காங்கிரஸ் ஊழியர் சிலரால் ஏற்படுத்தப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண் டிருக்கிறுன். ஆனல் அவனது பிற்கால ஜீவியம் எப்படி நடக்குமென்று நம்மால் சொல்ல முடியவில்லை.

* * *

ஹா ஹிந்து சமூகமே! நீ மிகவும் கொடுமை வாய்ந்ததாக மாறி விட்டாய். உன் ஹிருதயத்தில் அன்பு ரத்தம் வற்றிவிட்டது. உன்னைப் பல கோடி ஹரிஜனங்கள் சபிக்கின்றுர்கள். இன்று அவர்கள் உன்னை வாழ்த்தவில்லை. அவர்கள் கண்ணீருக்கு நீ என்ருவது பதில் சொல்லியே ஆகவேண்டும்.

பொன் மொழிகள்

எவனொருவன் மனிதனுக விரும்புகின்றுனே, அவன் மாமூல்களை நொறுக்குகிறவனுக இருத்தல் வேண்டும். —எமர்ஸன்

மனிதன் எதை அறிகிருனே அதுவே அவனுக்குச் சொந்தம். —கதே

விபத்தே மனிதனுடைய மெய்யான உரைகல்லாகும். —போமண்ட்

சந்தர்ப்பங்களா தேவை? சந்தர்ப்பங்களை நானே சமைத்துக் கொள்வேன். —நெப்போலியன்

சந்தோஷமே சரீராரோக்கியத்தின் அம்சம். —மாள்பி

சுதந்தரமே! உன் பெயரால் எத்தனை குற்றங்கள் இழைக்கப் படுகின்றன. —மேடம் ரோலண்டு

நகைச்சுவை

ஆசிரியர்:—அரிச்சந்திர மகாராஜன் இறந்து நெடுங் காலமாகியும் அவரை எல்லோரும் இன்னும் புகழுவதற்குக் காரணமென்ன?

மாணவன்:—அன்று முதல் இன்று வரையில் பொய் பேசாதவர் ஒருவரும் இல்லாமையினால்.

* * *



பஸ் கண்டக்டர்:—அட்யார், அட்யார், அம்மா, அம்மா, ரெண்டாள், ரெண்டாள்.

* * *

நடந்து செல்லும் முஸ்லீம் நண்பன்:—ஏது? சில நாட்களாக இவ்வளவு விடியற் காலையில் 'கிளம்பி' விடுகிறீரே?

காரில் போகும் மனிதர்:—தினந்தோறும் காலையில் 6 மைல் நடக்கும்படி டாக்டர் சொல்லி யிருக்கிறார்.



நடந்து செல்லும் முஸ்லீம் நண்பர்:—ஆனால் மோட்டாரில் போகிறீரே?

காரில் போகும் மனிதர்:—ஓஹோ அதுவா? சிற்றுண்டிக்கு நேரமாகி விடுமே என்று காரிலேயே போகிறேன்.

போஸ்டு மாஸ்டர்:—தாங்கள் அரை அணு தலையொட்டி அநேக கார்டுகளைப் பெட்டியில் போடுகிறீர்களே, விதிப்படி அவை அழிக்கப்பட்டு விடுமே.

முன் யோசனையும், ஆராய்ச்சிக் குணமுமுடைய ஒருவர்:— ஆமாம்! தபால் கட்டணம் உயருமென்று எதிர்பார்த்தே நான் 100 ரூபாய்க்கு $\frac{1}{2}$ அணு ஸ்டாம்புகள் முன்னதாகவே வாங்கிவிட்டேன். அவைகளை எல்லாம் கார்டுகளுக்கு ஒட்டியே போடப் போகிறேன். எப்படி அழிக்கப் படுகின்றன என்பதைத்தான் நான் பார்க்கப் போகிறேன்.

போஸ்டு மாஸ்டர்:—தங்களது ஆராய்ச்சி மூளைக்காக வந்தனம். போய் வாருங்கள்.

* * *

'பள்ளிப் பிள்ளை யென்றால் செல்வம் குறைந்து விடுமோ?'
ஆம், பாடசாலைச் சம்பளம் கட்ட வேண்டு மல்லவா ?

* * *

வேகமாகச் செல்லும் மோட்டா ரோட்டி நடந்து செல்லும் ஒரு நண்பரைப் பார்த்து, 'ஹல்லோ குட்மார்னிங்! சௌக்கியந்தானே?'



அதே சமயத்தில் இரக்கமுள்ள மற்றொரு மோட்டா ரோட்டி:— நண்பரே! எவ்வளவு தூரம் போக வேண்டும்! நான் ஏற்றிச் செல்லட்டுமா ?

நடந்து செல்லும் அம்மனிதர்:—இந்த எதிர் பாராத உதவிக்காக மிகவும் வந்தனம். சென்று வாருங்கள்.

* * *

மகன்:—அம்மா, 'பொய் சொன்னால் போஜனம் அகப்படா" தாமே. அது உண்மை தானா?

தாய்:—ஆம். உண்மைதான்.

மகன்:—அம்மா, அப்படியானால் எனக்குப் பலகாரம் செய்து கொடுங்கள். நான் இன்று பொய் சொல்லி விட்டேன்.

*　　*　　*



கோபாவேசங் கொண்ட மோட்டா ரோட்டும் துரை:—ஏ டிரைவர்! உனக்கு மண்டையில் மூளை யிருக்கிறதா? இடது பக்கம் ஏன் நீ டிராமை ஓட்டிப்போகக் கூடாது! மட ராஸ்கல்!

*　　*　　*

ஒரு மாது:—ஐயா, இன்று திருவொற்றியூரில் என்ன விசேஷம்? எங்கே பார்த்தாலும் வேடிக்கையும் விநோதமுமாய் இருக்கிறதே!

ஒரு குறும்பன்:—மகிழடி.

*　　*　　*

ஓட்டுச் சேகரிக்கக் கிளம்பியவர்:—இதோ இவர்தான் மரகதநாதர்! இந்த எலக்ஷனுக்கு அபேட்சகராக நிற்கிறார். இவர் தங்களது குமாரரோடு படித்தவர்; உங்களது மருமகப் பிள்ளையின் நண்பர். இவருக்கே தங்கள் ஓட்டைக் கொடுப்பீர்களென்று நம்புகிறேன்.

வாக்காளர்:— சரி, ஒருதா மட்டுமல்லாமல் இரண்டு அல்லது மூன்று முறைகள் வேண்டுமானாலும் ஓட்டுக் காகிதத்தில் குறிப்பிடுகிறேன்.

வெளி விகடம்

புருஷன்:—(வாயாடி மனைவியைப் பார்த்து) உன்னைக் கட்டிக் கொண்டு வாழ்வதைவிட பேயோடு வாழலாம்போ லிருக்கிறது. இனி நான் தூக்குப் போட்டுக்கொண்டு தான் சாக வேண்டும்.

மனைவி:— ஆமாம், நீங்கள் நித்தம் இப்படித்தான் வாயால் சொல்லிக்கொண் டிருக்கிறீர்கள். எதுவும் செய்கையில் செய்வதே யில்லை. —மு. வே. நல்லசாமி

* * *

பாடசாலையில் பரீட்சை நடந்துகொண் டிருந்தது. அப்போது ஆறுமுகம் என்ற மாணவன் தனக்குத் தெரியாத வினாக்களுக்குப் பக்கத்தி லிருந்த பையனைக் கேட்டு எழுதிக்கொண் டிருந்தான்.

ஆசிரியர்:—அடே ஆறுமுகம், நீ வீட்டில் படிக்காமல் இங்கே வந்து கணபதியைக் கேட்டுக் கேட்டு எழுதுகிறாயா?

ஆறுமுகம்:—சார், நீங்கள் தானே 'கற்றலில் கேட்டலே நன்று' என்று சொன்னீர்கள்!

—பா. மீனாட்சி

* * *

தபாற்காரன்:—ஐயா, இது தங்களுக்குச் சேரவேண்டிய கடிதமா? இதில் நெம்பர், தெரு முதலிய விவரங்கள் இல்லை. 'தமிழரசு' என்று மாத்திரம் போட்டிருக்கிறது.



'தமிழரசு' மானேஜர்:—(கடிதத்தை வாங்கிப் பார்த்துவிட்டு) ஆம், இது நமது ஆபீஸுக்கு எழுதப் பட்டதே. —திருநாவுக்கரசு

* * *

இந்த உலகம் சிறிதும் நிலையற்றது.

'ஆம்; அது தன்னைத்தானே சுற்றிக் கொள்வதோடு சூரியனை யும் சுற்றி வருகிறது.'

—விமலா

* * *



ஒரு கிழவர் பாதையில் போய்க்கொண் டிருக்கும் போது அவரது மூக்குக் கண்ணாடி நழுவி கீழே விழ்ந்து உடைந்து விட்டது.

அன்றையதினம் மாட்டுப் பொங்கல்.

ஐயா, தயை செய்து மூக்குக் கண்ணாடி ஷாப்பு எங்கிருக்கிறது? சற்று சொல்லுங்கள்.—வம்பன்

* * *

சிறுவன்:—அப்பா, எனக்கு ஒரு ஊதல் வாங்கிக் கொடுக்கிறீர்களா?

தகப்பன்:—ஓ! அது முடியாது. நீ சதா அதை ஊதிக் கொண்டு எனக்கு அதிக தொந்தரவு கொடுப்பாய்.

சிறுவன்:—இல்லையப்பா, நான் அதை நீங்கள் தூங்கும்போது மாத்திரம் ஊதுகிறேன்.

—பா. மீனாட்சி

* * *

நோயாளி:—டாக்டர்வாள், கண்நோய் என்னால் தாங்க முடியவில்லையே.



டாக்டர்:—நான் நேற்று தங்கள் வேலைக்காரனிடம் போட்டுக் கொள்ளும்படி மருந்து கொடுத்தனுப்பினேனே.

நோயாளி:—ஆமாம், அவன் போட்டுக்கொண்டான். என் நோய் தீரவில்லையே.

—மு. வெ. நல்லசாமி

* * *

ஒரு பேராசைகொண்ட பால்காரன் தினந்தோறும் சரி பாதி ஜலம் சேர்த்து ஒரு கனவான் வீட்டிற்குப் பால் கொடுத்து வருவது வழக்கம். வீட்டு எஜமானன் இதைக் கண்டு பிடித்து விட்டது. இவனுக்குத்தெரியாது. மாதம் பிறந்ததும் பால்காரன் எஜமானனிடம் வந்து 'போன மாதம் பால் கணக்கு ரூ 10–0–0 ஆகிறது' என்றான்.

எஜமானன்:—நல்லது நாளை சாயுங்காலம் பீச்சில் ரேடியோ வண்டை என்னைப் பார், பணம் கொடுக்கிறேன்.

பால்காரன்:—அப்படியே.

மறுநாள் அவன் ரேடியோ வண்டை போய் அவரைப் பார்த்தான்.

அவர் இவனைக் கடலோரமாக அழைத்துச் சென்று தமது பர்ஸி லிருந்து ஒரு 10 ரூபா நோட்டை எடுத்து இரு துண்டாகக் கிழித்து ஒரு பாதியைப் பால்காரனிடம் கொடுத்து விட்டு மற்றொரு பாதியைச் சமுத்திரத்தில் போட்டு விட்டார்.

பால்காரன்:—இது என்னங்கொ. பாதிநோட்டைக் கொடுத்தீர்களே!

எஜமானன்:—நீ பாதி ஜலமும் பாதி பாலும்தானே சப்பிளை செய்து வந்தாய். நான் செய்ததும் நியாயம் தானே? —வம்பன்

*　　　　*　　　　*

ஒருவர் ரயிலில் பிரயாணஞ் செய்துகொண் டிருக்கும்போது அவருடைய பெட்டியை ஒரு திருடன் எடுத்துக்கொண்டு ஓடினான். அவர் அதைப் பொருட் படுத்தா திருந்தார்.

அதைக் கண்டு பயந்த மற்றப் பிரயாணிகள்:—ஏன் ஐயா, உமது பெட்டியைத் திருடன் எடுத்துக்கொண்டு ஓடுகிறான். பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறீரே?

அம் மனிதர்:—அப் பெட்டியின் சாவி என்னிடம் இருக்கும் வரையில் அவன் அப் பெட்டியை எப்படித் திறப்பான்?

—வே. வை. ஜேயராமன்

பலகாரந் தின்பதற்குப் பாசாங்கு செய்த பார்ப்பாத்தி

[கனகம்]

சிற்றூரில் ஓர் ஏழைப் பார்ப்பனன் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். அவன் ஒவ்வொரு நாளும் வீடுதோறுஞ் சென்று யாசித்து வந்தால்தான் அவர்கள் அடுப்பும் புகையும், பசியும் அடங்கும். அவர்கள் நல்ல உருசியுள்ள பண்டங்களையும் காய்கறி பதார்த்தங்களையும் சாப்பிட்டதேயில்லை. ஆனால், அக்கம் பக்கத்தார் செய்யும் பண்டம் பலகாரங்களின் வாசனையும், காய்கறி பதார்த்தங்கள் பொரிக்கும் வாசனையும் பார்ப்பான் மனைவி மூக்கில் ஏறிக்கொண்டேயிருந்தது; நாவிலும் நீர் ஊறிக்கொண்டே யிருந்தது. பார்த்தாள் பார்ப்பாத்தி 'ஐயோ! நாம் இப்படிச்செய்து சாப்பிடுவதற்கில்லையே, இந்தப் பாவி பார்ப்பானைக் கட்டிக்கொண்டு ஒரு நாளேனும் இனிமையான பலகாரங்களை உண்டோமா? இல்லையே, நானொரு யோசனை செய்கிறேன். அதற்காகிலும் இந்தப் படுபாவிப் பார்ப்பான் என்ன செய்கிறானென்று பார்க்கிறேன்' என்று தன் மனத்தில் திடம் பண்ணிக்கொண்டு, ஒருநாள் பார்ப்பான் தூங்கும்போது அவன் பக்கத்தில் படுத்திருந்தவள் எழுந்து, 'ஆ, ஊ, ஆ, ஊ, ஆம், டாம், டேம்' என்றும், ஐயோ! அடபாவி! எனக்கு வயிறெரிகிறதே, பசிக்கிறதே, எனக்குப் பசி தீர நல்ல பூசை போடவில்லையே. நீ ஒரு பார்ப்பானா?' என்று ஆவேசங் கொண்டு குதித்துக் குதித்துத் தலைமயிரை விரித்துப்போட்டு ஆடினாள். உடனே பார்ப்பான் கண்விழித்துப் பயந்து நடுங்கி, மனைவி மேல் தெய்வம் வந்துவிட்டதென்று நினைத்துக் கற்பூரங் கொளுத்தி அவளிடம் வந்து 'அம்மணி! தாயே! என் குல தெய்வமே! என்னைப் பெற்றவளே! உன் காலில் விழுகிறேன். நீங்கள் யார்? பூவாடைக் காரியா? காட்டேரியா? மாரியம்மனா? சடாமுனியா? வாழ்முனியா? மன்னார்சாமியா? பாவாடைராயனா? பனையேறி அம்மனா? தென்னேரி அம்மனா? மலையாளப்பேச்சுபோல் பேசுகிறீர்களே மலையாள பகவதியா? துலுக்கு பேசுகிறீர்களே, துலுக்கு சைத்தானா? இலாடப் பேச்சு பேசுகிறீர்களே எங்களுக்கு ஒன்றுந் தெரியவில்லையே! நீங்கள்

யார் தாயே! சொல்லுங்களே, உங்களுக்குத் தண்டம் போடுகிறேன்' என்றான் பார்ப்பான். அப்போது, அவள், 'உஸ், உஸ், அடே, படே, கட கட், அம், உம், சட், பட், கட் நான் தெரியாதா' என்று பலவிதமாக உளறிக் கொட்டி நான் தான் 'அலர்மேல் மங்கைத் தாய்' என்று பிதற்றி, 'அடே நீ பார்ப்பானா? உன்

அப்பன் செய்த பிரார்த்தனையை நீ யிதுவரையுஞ் செலுத்தவில்லை. அதனால்தான் உனக்குப் பிள்ளை பிறக்காமல் செய்துவிட்டேன். இவ்வளவு கஷ்டத்தி லிருக்கிறாய்' என்றது ஆவேசம். பார்ப்பான் 'அம்மா தாயே? நான் ஏழையாயிற்றே எங்கிருந்து உனக்குப் பூசைபோடுவேன்' என்றான். 'அடே! நீ ஏழையா யிருந்தால் எனக்கென்ன? எட்டையா யிருந்தால் எனக்கென்ன? எனக்கு அவசியமில்லை. நீ கஷ்டப்பட்டு எனக்கு நல்ல பண்டம் பலகாரங்களோடும் கறிபதார்த்தங்களோடும் பூசை போடாவிட்டால் உன்னை யின்னுங் கஷ்டப் படுத்துவேன் தெரியுமா? உஸ், உஸ், உஸ். உஸ்' என்றாள். 'அம்மா தாயே! நாளைக்கே பூசை போடுகிறேன். கோபிக்காதே தெய்வமே. எங்கள் பேரில் கிருபை வைத்து ஒரு பிள்ளை வரங் கொடுக்கணுந் தாயே' என்றான் பார்ப்பான். 'நல்லது நீ பூசைபோடு பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு ஆவேசம் மலையேறி விட்டது.

பிறகு, மறுநாள் காலையில் பார்ப்பான் வீடு வீடாய்ப்போய்த் தன் மனைவிமேல் ஆவேசம் வந்த சங்கதியையும் பூசைபோடவேண்டிய சங்கதியையும் ஒவ்வொருவரிடமுஞ் சொல்லி உளைந்து, அரிசி, பருப்பு, சர்க்கரை, வெல்லம், தயிர் முதலிய பலவற்றையும் யாசித்துச் சேகரித்து வந்து மனைவியிடங்கொடுத்தான். அவள் அவற்றை வாங்கிக் கொழுக்கட்டை, உண்டை, தோசை, வடை, இட்டலி, தயிர் வடை,

பொங்கல், புளியோதரை முதலிய பலகாரங்கள் செய்து வாசலில் வைத்து அலர்மேல்மங்கைத் தாயாருக்குப் பூசை போட்டாள்; புருஷனைக் கும்பிடச் சொன்னாள்; தாடையில் போட்டுக் கொள்ளச் சொன்னாள். அவனும் அப்படியே செய்தான். பிறகு இருவரும் உட்கார்ந்தனர். பலகாரங்களைக் 'காய்ந்த மாடு கம்பங் கதிரில் விழுந்தாற் போல்' மனைவி மிக்க ஆத்திரத்தோடு விலாப் புடைக்க மூக்கின் வழி வருமளவுந் தின்றாள். இப்படி இருவருந் தின்று சந்தோஷித்தனர். இவ்



விதமாக இரண்டு மூன்று மாதத்திற் கொருதரம் மனைவி மேல் ஆவேசம் வருவதும் புருஷன் பலகாரங்களுக்கு வேண்டிய சாமான்களை யாசித்து வந்து மனைவியிடங் கொடுப்பதும், பூசை போடுவதும், அவள் விலாப்புடைக்கத் தின்பதுமா யிருந்தாள். இவ்வாறு பார்ப்பாத்தி மேல் ஆவேசம் வருவதைக் கவனித்து வந்த எதிர் வீட்டு அண்ணாசாமி யென்பான் பார்ப்பானைக் கூப்பிட்டு 'ஐயரே! உன் மனைவி மேல் இன்னொரு நாளைக்குத் தெய்வம் வரும்போது என்னைக் கூப்பிடு' என்றான். பிறகு, இரண்டு மூன்று நாள் பொறுத்து பார்ப்பாத்தியின் மேல் தெய்வம் வந்து 'ஆ, ஊ, உஸ், தஸ், புஸ்' என்று இப்படியும் அப்படியும் தலை மயிரை விரித்துக்கொண்டு வாயில் வந்தபடி உளறிக் கொட்டிக் கூத்தாடினாள்; 'ஓஹா, ஓஹா' என்று கழுதைபோல் கத்தினாள். உடனே பார்ப்பான் எதிர்வீட்டு அண்ணாசாமியைக் கூப்பிட்டான். பார்ப்பான் அவள் காலில் விழுந்து கும்பிட்டான். கற்பூரங் கொளுத்தி 'அம்மா தாயே! நீயா' rென்றான். 'அடே! நான் அலர்மேல் மங்கைத்தா யென்று உனக்குத் தெரியாதா' என்று ஒரே கூச்சல் போட்டாள். அக்கூச்சலைக் கேட்டதும் அண்ணாசாமி மேல் ஆவேசம் வந்து விட்டது. உடனே பார்ப்பான் கற்பூரங் கொளுத்தி 'சுவாமி நீங்கள் யார்' என்றான். 'அடே நான் தெரியாதா?

நான்தான் ஏழுமலையான் வெங்கடேசப் பெருமாள்' என்று கூவி பார்ப்பாத்தியின் தலைமயிரைப் பிடித்துச் சுற்றிச் சுற்றி வரும்படி யிழுத்து கையைப் புடைத்து, 'உஸ், அஸ்' என்று கையை விரித்து ஆடினான். தலைவிரி கோலமாய் ஆடுகிற பார்ப்பாத்தியை இழுத்து



முதுகிலும் தாடையிலும் தப்பு திப்பு பளீர் பளீரென்று அடித்துக் கீழே தள்ளி 'அடி! அலர்மேல் மங்கா! இவளை விட்டுப் போகிறையா யில்லையா' என்று வெடிகுண்டு வெடிப்பது போல அதட்டிக் கேட்டார் வேங்கடேசப் பெருமாள். உடனே அவள் பயந்து அடி பொறுக்க முடியாமல் 'ஐயோ இதோ போகிறேன், இனி வர மாட்டேன் கற்பூரங் கொளுத்துங்கள்' என்று தெய்வம் மலையேறி விட்டது. பார்ப்பாத்தியும் படுத்து விட்டாள். பிறகு, தெய்வம் வருவதே யில்லை; பூசை கேட்கிறதே யில்லை. அண்ணாசாமி நல்ல வேலை செய்தான். பார்ப்பானும் சுகமாய் வாழ்ந்தான்.



ஒரு பிரபுவின் வீட்டில் நுழைந்து இரும்புப் பெட்டியை உடைத்து அதிலுள்ள விலையுயர்ந்த நகைகளையும் நோட்டுக்களையும் திருடிக்கொண்டிருக்கும் கள்ளனைப் பார்த்து அவ்வீட்டுச் சிறுவன் 'ஐயா! இந்தச் சாக்லட் டப்பியைத் திறந்து கொடுங்கோ' என்று கேட்கிறான்.

தாசிகளும் தாசிகாந்தர்களும்

ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரிய ருடையது)

சென்னை-600 008

சென்றமாதத் தொடர்ச்சி

காட்சி 2

இடம்—காமபாலன் வைத்துக்கொண் டிருக்கும் தாசி மாயா சுந்தரியின் வீடு.

காலம்—காலை 9 மணி.

(மாயாசுந்தரி சோபாவின் மேல் படுத்துக்கொண் டிருக்கிறாள். காமபாலன் அவள் பக்கத்தில் உட்காருகிறான்.)

மாயா சுந்தரி:—யாரது உட்கார்ந்தது?

காமபாலன்:—மாயா! நான் தவிர உன் பக்கத்தில் யார் உட்காருவார்கள்? (என்று கோபமாகக் கேட்டான்)

மாயா:—ஆ! நீங்களா? நான் பாராமற் சொன்னேன். ஏனிப்படிச் சத்தம் போடுகிறீர்களே?

காமபா:—மாயா! இப்படித் திரும்பு.

மாயா:—சரி, நல்ல வேலையாயிற்று. 'எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா? உங்களுக் கென்ன போச்சு? நான் படுகிற கஷ்டம் எனக்குத் தெரியும்.

காமபால:—உன் உடம்புக் கென்ன? சொல்லித் தொலை.

மாயா:—போதும் போங்கள். நான் மூன்று நாளாகச் சொல்லி வருகிறேன். அலமாரியில் என்னென்ன இல்லை யென்று பார்த்துச் சொல்லுங்களென்று சொன்னால், நீங்கள் கவனிக்கிறதில்லை. நான் அது கொஞ்ச மெடுத்துக் கொண்டால்தான் என்னுடம்பு கொஞ்சஞ் சௌக்கியப்படும்.

காமபால:—மாயா! வருத்தப்படாதே. நான் அலமாரியைப் பார்த்து உனக்கு வேண்டியவற்றை வாங்கி வருகிறேன். நான் உனக்கு என்ன செய்யாமற் போனேன்? மாயா! அலமாரியில் உஸ்கி அரை புட்டித்தா னிருக்கிறது. பிராந்தி கால் புட்டித்தா னிருக்கிறது. ஒயின் கொஞ்சங்கூட வில்லையே.

மாயா:—சரி, அந்த உஸ்கி புட்டியை யெடுங்கள். கொஞ்சங் கிளாசில் விடுங்கள். நீங்களுங் கொஞ்ச மெடுத்துக் கொள்ளுங்கள்.

காமபா:—நான் வீட்டிற்குப் போகிறேன். இப்போதெனக்கு வேண்டாம்.

மாயா:—இதற்குள்ளாகவா வீட்டிற்குப் போகிறீர்கள். 11 மணிக்குப் போகலாம், கொஞ்ச மெடுத்துக் கொள்ளுங்கள்.

காமபா:—ஆனல், நீ சாப்பிட்டு மீதியை வை.

மாயா:—இன்னுங் கொஞ்சம் ஊற்றுங்கள். சாப்பிடுங்கள்.

காமபா:--இதோ சாப்பிடுகிறேன் (என்றுகுடித்துவிட்டு) மாயா! நான் இன்றைய தினம் கிண்டி குதிரைப் பந்தயம் பார்க்கப் போகிறேன், நீயும் வருகிருயா ?

மாயா:—சரி, என்னையா கேட்கிறீர்கள் ? என்னுடம்பிருக்கிற தென்ன ? தலை யுடைத்துக் கொண்டு போகிறது. உடம்பில் சுரம் வருவதுபோ லிருக்கிறது. சாப்பாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. நீங்கள் சும்மா என் மனசைத் தொட்டுப் பார்க்கிறீர்களா என்ன?

காமபா:—இல்லை, மெய்யாகத்தான் கேட்கிறேன்.

மாயா:—நீங்கள் தனியாகப் போகிறீர்களா, அல்லது யாரோடாகிலுஞ் சேர்ந்து போகிறீர்களா?

காமபா:—ஒருவரோடு சேர்ந்துதான் போகின்றேன்.

மாயா:—யாரோடு?

காமபா:—நாலாம் வீட்டு திமிர்தண்டியை வைத்துக்கொண்டிருக்குந் துண்டுபத்தரோடுதான் போகிறேன்.

மாயா:—சரி, சரி, நீங்கள் திமிர்தண்டி வீட்டிற்கும் போகிறீர்களா?

காமபா:—நான் அவளைப் பார்த்ததே யில்லை. அவள் கறுப்போ சிவப்போ எனக்குத் தெரியாது. நீ யெப்படி என்னைப் பார்த்த பிறகு வேறொருத்தனைப் பார்க்கிறதில்லையோ, அது போலவே, நான் உன்னைப் பார்த்த பிறகு வேறொருத்தியையும் பார்க்கிறதே யில்லை. ஏன் வீணாக என்மீது பழி சுமத்துகிருய்?

மாயா:—ஆனால், தண்டுபத்தரை உங்களுக் கெப்படித் தெரியும்?

காமபா:—அவரை எனக்கு வெகு நாளாகத் தெரியும். குண்டு வெங்கடேசய்யர் சொல்லத்தான் திமிர்தண்டியை வைத்துக்கொண் டிருக்கிற சங்கதி யெனக்குத் தெரியும். அதற்கு முன் அவளைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

மாயா:—சரி, திமிர்தண்டி வீட்டிற்குப் போவதா யிருந்தால் என்னை மறந்து விடுங்கள். என் வீட்டிற்கு வரவே வேண்டாம்.

காமபா:—அடி பைத்தியமே! நானுன்னை மறந்து விடவேண்டு மென்று நீ சொன்னாலும், நான் உன்னை ஒருகாலும் மறக்கமாட்டேன்.

மாயா:—நான் உங்களை மறந்த பிறகு, நீங்கள் மாத்திரம் என்னை மறவாமல் நினைத்துக்கொண் டிருந்தால், அது உங்களுக்குத் தான் என்ன பிரயோசனம்? எனக்குந்தான் இலாப மென்ன?

காமபா:—அப்படியா! என்னை நீ மறந்தால் உன் காலைப் பிடிக்க அநேகர் வருவார்கள்.

மாயா:—அது போலவே, உங்கள் கையைப் பிடிக்க அநேக தாசிகள் வருவார்கள்.

காமபா:—அவர்களில் ஒருவரையும் விரும்பா விட்டால்? நீ அப்படி யிருக்க மாட்டாய்.

மாயா:—என்னையா சொல்லுகிறீர்கள்? இனி நான் ஒருவனைப் பார்ப்பதாவது? அது கனவிலு மில்லை.



காமபா:—மாயா! இது மெய்தானா? ஆனால், இதோ கை போடு--பார்க்கலாம்.

மாயா:—நான் உங்களை மறப்பதே யில்லை (என்று கையடிக் கிறாள்) நீங்கள் அடியுங்கள் பார்க்கிறேன்.

பாட்டு

'மதியிலா மனையாளோடு மக்களும் அலைந்திட்டாலும்
துதிபெறு கடல்களேழுந் தோன்றியே யொன்றானாலும்
மதியொடு இரவிதெற்கு வடக்கினி லுதித்திட்டாலுஞ்
சதிசெய மாட்டேனுன்னைச் சத்தியமிதுவே பெண்ணே.'

நான் உன்னை மறப்பதே யில்லை (என்று கையடிக்கிறான்.) இருவரும் ஒருவரை யொருவர் தழுவி களிப்பெனுங் கடலுள் மூழ்கிறார்கள்.

மாயா:—அந்தக் கிளாசை யெடுங்கள். உஸ்கி கொஞ்சம் விடுங்கள். நீங்கள் ஆகட்டும்.

காமபா:—நீ சாப்பிட்டுக் கொடு, நான் சாப்பிடுகிறேன்.

மாயா:—அப்படியே (என்று தான் குடித்த பிறகு, காமபால னுக்குக் கொடுக்கிறாள்.)

காமபா:—(கொஞ்சமாகக் குடிக்கிறான்) மாயா! நேரமாகிறது. நான் வீட்டிற்குப் போகிறேன். அப்படியே கிண்டிப் பந்தயத் திற்குப் போகிறேன். உன்னைக் கூப்பிட்டால் உடம்பு சௌக்கிய மில்லை யென்கிறாய். நான் போய் வரலாமா?



மாயா:—சரி தான், போய் வாருங்கள். என்னை ஒண்டியாய் விட்டுப் போகிறீர்கள். திடீரென்று யாராகிலும் வீட்டுக்குள் நுழைந்தால், எனக்கு ஆண் துணை யாரிருக்கிறார்கள்? நானோ பயங்காளி. யாராகிலும் உரத்துப் பேசினாலே நான் பயந்து போவேன். அடிக்கடி இப்படித் தான் நீங்கள் என்னைத் தனியாய் விட்டுப் போகிறீர்கள். (என்று தேம்பித் தேம்பி அழுகிறாள்.)

காமபா:—மாயா! அழாதே. ஆனல், நான் போகாமல் நின்று விடுகிறேன். என்ன சொல்லுகிருய்?

மாயா:—இல்லே, இல்லே. உங்க ளாசையை நான் கெடுக்க மாட்டேன். நீங்கள் சுகமாய்ப் போய் வாருங்கள் (என்று அழுகிருள்.)

காமபா:—சுந்தரி! நீ அழாதே. சீக்கிரம் வந்து விடுகிறேன். (வேலேக்காரி எமகண்டியைக் கூப்பிட்டு) எமகண்டி! உன் அக்காளேப் பார்த்துக் கொள். எங்கேனும் போய் விடாதே. கதவைத் தாளிட்டுக் கொள் என்று போகின்ருன்.)

(காமபாலன் சென்ற 5 நிமிஷத்திற்குள் யாரோ தெருக் கதவைத் தட்டுவதைக் கேட்டு)

எமகண்டி:—யாரது? (என்று கதவைத் திறக்கிருள்.)

விட்டல தாஸ் பிரவேசிக்கிருர்.

எமகண்டி:—நீங்கள் வரவில்லே யென்று அக்காள் அழுது கொண்டே யிருக்கிருர்கள்.

விட்டல தாஸ்:-மாயா! ஏனழுகிருய்? அழாதே.

மாயா:—போதும் போதும் போங்கள். ஆண் பிள்ளேகளேக் கொஞ்சமும் நம்புவது கூடாது. இதோ நாளேய தினம் வருகிறேனென்று சொன்னீர்களே வந்தீர்களா? என் மனமெல்லாம் உங்கள் மேலேயே அடித்துக் கொள்ளுகிறது. ஆண் பிள்ளேகள் மனமோ கல்லு. நீங்கள் என்ன பொடி போட்டீர்களோ தெரியாது. ஆண் பிள்ளேகள் குணந் தெரியாமல் பெண் பிள்ளேகள் ஆசை வைப்பது மிகவுங் கெட்டது.

'ஆரைத் தழுவி யநுசரித்துக் கொண்டாலும்
தாரத்தா ராசைவிடச் சொன்னேனே—தாரத்தார்
ஆபத்துக் காவாரோ அன்றழுத கண்ணீரும்
தாபத்தைத் தீர்க்குமோதான்' என்று சொல்லி யிருக்கிறதே தெரியாதா. (என்று அழுது கொண்டே பேசுகிருள்.)

(இதனை வாசிப்பவர்களே 'போவார்க் கழுத கண்ணீர் வருவார்க்கும் பொருந்தியதே' என்றபடி காமபாலன் போனதற்கு அழுத கண்ணீர், அவன் போனதும் வந்து நுழைந்த தாஸரவர் களுக்கும் பொருந்தியதைக் கவனிப்பீர்களாக.)

விட்டல:—கண்மணி மாயா! அழாதே (என்று தன் மேல் வேட்டியால் அவள் கண்ணைத் துடைக்கிருர்.) இதோ இதை வைத்துக் கொள் (என்று நாலு சவரனையும் பத்து ரூபாய் நோட்டையுங் கொடுக்கிருர்.)

மாயா:—(வேலைக்காரியை) அடி எமகண்டி! காலுக்குச் சலங் கொண்டு வாடி. அந்தப் பெரிய டின்னைத் திறந்து பிஸ்கட்டும் காபியுங் கொண்டு வா சீக்கிரம். (தாஸைப் பார்த்து) நீங்கள் கொஞ்சம் உஸ்கி யெடுத்துக் கொள்ளுங்களே. அது உடம்புக்கு நல்லது.

விட்டல:—அது எனக்குப் பழக்கமே யில்லை.

மாயா:—காலலம்பிக் கொள்ளுங்கள். தலை குட்டை, கோட்டு கழற்றி வையுங்கள். அது பழக்கமில்லை யென்று சொல்லுகிறீர் களே, பழக்கம் எப்படி வருகிறது? தினந் தினங் கொஞ்சங் கொஞ்ச மாகச் சாப்பிட்டு வந்தால், பிறகு, அதிகஞ் சாப்பிடப் பழக்கமாய் விடுகிறது. உஸ்கி சாப்பிடுவதால் உடம்பு திடமாயும், மனத்திற்கு உற்சாகமாயும், நரம்புகள் தளராமலு மிருக்கும். கொஞ்ச மெடுத்துப் பாருங்கள்.

விட்டல:—மாயா! எனக்கு வேண்டாம். சாராயம் உடம்புக்குக் கெடுதி யென்கிருர்களே, அதைச் சாப்பிடலாமா?

மாயா:—அதனேடு பழகாதவர்கள் தாம் அப்படிச் சொல்வார்கள். எப்படிப்பட்ட பெரிய பெரிய மனுஷர்க ளெல்லாருஞ் சாப்பிடுகிருர் களே. நீங்கள் என்னேடிருந்து கொஞ்சஞ் சாப்பிட வேண்டும்.

விட்டல:—சரி, நீ கொஞ்சஞ் சாப்பிட்டுக் கொடு.

மாயா:—எமகண்டி! அந்தக் கட்லேஸ் கொண்டுவா (இருவருஞ் சாப்பிடுகிருர்கள்.) நீங்கள் நேற்று ஏன் வாவில்லை? குண்டோதா ஐயர் வந்தாரா?

விட்டல:—ஐயர் வந்தார். நேற்று என் மாமனும் மாமியாரும் தங்கள் பெண்ணை யழைத்துப் போக வந்தார்கள். அவர்களைப் பிரயாணப்படுத்தி யனுப்புவதற்கு நேரமாய் விட்டது. அதனால் வரவில்லை.

மாயா:—உங்கள் பெண்டாட்டி கண்ணு எப்போ வருவாங்கோ?

விட்டல:—ஒரு மாதம் பிடிக்கும்.

மாயா:—மெத்த சந்தோஷம். நான் ஐயர் மூலமாய் உங்களுக்குச் சொல்லி யனுப்பும்போதெல்லாம் நீங்கள் அவசியம் வந்து உங்கள் முகத்தைக் காட்டிப் போக வேண்டும். உங்களைப் பாரா விட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்தாப்போ லிருக்கிறது. அதென்னமோ உங்கள் முகத்தில் முழித்த நேர்வாசி யுங்களை மறக்கக் கூடவில்லை. உங்கள் மனம் அப்படி யிராது.

விட்டல:—அப்படி நினைக்காதே. நான் கோவிலுக்குப் போனாலும் உன் நினைப்பே. திருச்சூரணம் வைத்துக் கொள்ளும் போதும் உன் கியாபகமே. கோவில் தாசிகளைப் பார்க்கும்போதும் உன் கவனமே. என் பெண்டாட்டியோடு பேசும்போதும் உன் எண்ணமே. எப்போதும் உன் ஏக்கமே. நீ யென்ன பொடி மருந்து போட்டனையோ தெரியாது. ஆதலால்தான், உன்னை மறக்க முடியவில்லை.

மாயா:—உண்மைதான். இருக்கலாம். 'பெண்ணென்றால் பேயு மனமிரங்கும்' என்பது போல, நான் பெண்ணானதால், உங்களுக்கு என் மேல் ஆசை யுண்டாவது சகசமே. ஏதோ பூர்வத்தில் உங்களுக்கும் எனக்குஞ் சம்பந்தமிருந்ததினால்தான், இப்போதும் அந்தச் சம்பந்தம் விடாமல் தொடர்ந்து வருகிறது. என் கையைப்



பார்த்தீர்களா? ஒவ்வொரு வளையல்தா னிருக்கிறது. இன்னும் இரண்டிரண்டு வளையலிருந்தால் நன்றா யிருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

ங்கே போகிறது? செய்யலா மென்றால், வருகிறதற்கும் செலவு செய்கிறதற்கும் சரியாய்ப் போகிறது. மிச்சம் பிடிக்க வழியில்லை.

விட்டல:—மாயா! கண்ணே! நீ வருத்தப்படாதே. நான் செய்து போடுகிறேன்.

மாயா:—நான் உங்களுக்கு வருத்தங் கொடுக்க இஷ்டமில்லை. உங்க ளன்பிருந்தால் போதுமானது.

விட்டல:—இது எனக்கொரு பெரிய காரியமல்ல. இன்னொரு நாள் வரும்போது கொண்டு வந்து தருகிறேன். செய்து போட்டுக் கொள்.

மாயா:—உங்க ளிஷ்டம் போல் செய்யுங்கள்.

விட்டல:—மாயா! நேரமாகிறது, நான் போய் வருகிறேன்.

மாயா:—நீங்கள் எப்போது வந்தாலும் அவசரத்தை மடியில் கட்டிக்கொண்டு வருகிறீர்கள். கொஞ்ச நேர மிருந்து போங்கள். உங்களை விட்டிருக்க மனமில்லை.

விட்டல:—இருக்கட்டும். நானெங்கே போகிறேன், நீ யெங்கே போகிறாய். நான் போய் வருகிறேன் மாயா.

மாயா:—எப்போது வருவீர்கள்? ஞாபக மிருக்குமா?

விட்டல:—கண்மணி! நீ சொல்ல வேண்டியதில்லை (என்று போகின்றார் விட்டலதாஸர்.) [தொடரும்]



டாக்டர்:—நோயாளியைப் பரீக்ஷித்துப் பார்த்த பிறகு, ஐயா, நீர் இனி சுருட்டு பிடிக்கக் கூடாது.

வியாதியஸ்தர்:– என்னிடம் அந்த வழக்கமில்லையே.

டாக்டர்:—ஆனால், இனி மேலும் பிடிக்கக் கற்றுக் கொள்ளாதீர். —வம்பன்

வீண் பேச்சு

[மறையோலி]

ஒரு திருடன் ஒரு வீட்டில் திருடும் பொழுது கையுங் களவுமாய் அகப்பட்டுக் கொண்டான். வீட்டுக்காரர் அவனைத் தம் கையும் தம் மனைவி கையும் நோவும் வரையில் அடித்துவிட்டு ஒரு தூணில் அவனைக் கட்டிப் போட்டு,

'அடே ராஸ்கல், இனிமேல் இந்த வூட்டில் திருடாதே; திருடாதே' என்று கழிகொண்டு அடித்தார்.



'ஸ்வாமி, என்னை அடியாதீங்க. இனிமேல் இந்த வீட்டிலே திருடவே மாட்டேன். இந்த வூட்டுக்கு வரவே மாட்டேன்' என்று அலறினன். திருடன்.

'சரி, நல்லது, ஒழிஞ்சு போ' என்று அவனை அவிழ்த்து விட்டு விட்டார் வீட்டுக்காரர்.

இரண்டு மாத காலம் கழிந்தது. வீட்டுக்காரர் வேறொரு வீட்டிற்குக் குடி போனர். அங்கும் ஓரிரவு அதே திருடன் வந்து திருடும்போது அகப்பட்டுக் கொண்டான்.

'ஏண்டா, போக்கிரிப் பயலே, இந்த வீட்டுக்குத்தான் வராதே என்று சொல்லித் தானே, உன்னைப் போன தடவை விடுவித்தேன்' என்றார் வீட்டுக்காரர் கோபமாக.

'ஸ்வாமி, வீணுகப் பொய் சொல்லாதீங்க; நாக்குப் புழுத்துப் பூடும். அந்த வீடு வேறு. இந்த வீடு வேறு' என்றான் திருடன்.

* * *

'பிறர் செய்கிருர்களே என்று நாம் ஒன்றுஞ் செய்யக் கூடாது. நாமே ஆலோசித்து நம் மனத்தில் நியாயம் என்று பட்டதைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாதவர்கள் ஆடுகளுக்குச் சமானமென்று சொல்லலாம்' என்பதைப் பற்றி உபாத்தியாயர் வெகு நேரம் பிள்ளைகளுக்கு விளக்கிக்கொண் டிருந்தார்.

அதே மாலை ஒரு மாணுக்கன் பள்ளிக்கூடம் விட்டு ரயிலில் ஏறி வீட்டுக்குப் போகும்போது, முதல் கிளாஸ் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டான். அவனிடம் மூன்ரும் வகுப்பு டிக்கட்டே இருந்தது.

சிறிது நேரஞ் சென்று, டிக்கட் பரிசோதிப்பவர் வந்து பையனிடம் டிக்கட்டை வாங்கிப் பார்த்தார்; அதட்டலாக 'இந்த டிக்கட்டை வைத்துக்கொண்டு முதல் வகுப்பு வண்டியிலே ஏறலாமா?' என்ருர்.



பையன் தன் புத்தகத்தை எடுத்து, அன்று பகல் உபாத்தியாயர் விளக்கிக்கொண் டிருந்த பாகத்தைக் காட்டி, 'என் மனத்தில் நியாயம் என்று பட்டதைத்தான் செய்திருக்கிறேன். நான் ஆடு அல்ல' என்ருன்.

* * *

மூர்த்தி:—உன் தொழில் வெகு ஒழுங்காய் நடந்து வருகிறது. ஊதியமும் நன்ருய்க் கிடைக்கிறது. தொழில் துவக்கும்போது என்ன முதல் போட்டாய் ?

ராமு:—நான் சொன்னுல் நம்பமாட்டாய். பதின்மூன்று அணுப் போட்டேன்.

என்ன, 13 அணுவா? சரியாகச் சொல். அதை வைத்துக் கொண்டு என்ன செய்தாய்?

அருகி லிருந்த தபாலாபீஸுக்கு ஓடி என் மாமனுருக்கு 1,000 ரூ அனுப்பும்படி தந்தி அடித்தேன்.

* * *

டாக்டர்:—உங்களுக்கு நோய் இருப்பதாகத் தெரியவில்லையே ஹிருதயம் சரியா யிருக்கிறது. கண், நாக்கு முதலியவைகளிலும் குணக்கேடு இல்லை. என்ன உங்களுக்கு.

தடித்த ஸ்திரீ:—வியாதி இல்லாமலா சரீரம் இவ்வளவு பெருக்கும் ? மூச்சுவிட முடியவில்லை. திணறுகிறது. சாப்பிட முடியவில்லை. நடந்தால் மூச்சுத் தடுமாறுகிறது.

டாக்டர்:—சரி, உங்களுக்கு என்ன தேவை ?

தடித்த ஸ்திரீ :— நான் இளைக்குமாறு ஏதாவது மருந்து கொடுக்க வேண்டும். உண்டி சுருக்கினேன்; பட்டினி கிடந்தேன்; ஒன்றும் பயனில்லை.

சற்றுத் தயங்கினவராய், அந்த தடித்த ஸ்திரிக்கு ஒரு அறையைக் காட்டினார்.

ஐந்து நிமிஷங்கூட கடந்திராது. மிக மெலிந்த ஸ்திரீ ஒருத்தி வந்தாள். யாராவது சற்றுப் பலமாக மூச்சு விட்டால் கீழே சாய்ந்து விடுபவள்போல் காணப்பட்டாள். அவள் ஆசை பெருக்க வேண்டுமென்பதே.



அவளையும் டாக்டர் முன் காட்டிய அறைக்கு அனுப்பி, அங்கிருக்கும் ஒரு ஸ்திரீயிடம் மெலிந்திருக்கும் மர்மத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டு, அவளிடமிருந்து பெருப்பதற்குள்ள சூக்ஷுமங்களைத் தெரிந்து கொண்டு போகுமாறு சொல்லியனுப்பினார்.

ராஜா சாண்டோ

[கலா விநோதன்]

சில மாதங்களுக்கு முன் சென்னை, 'கினிமா ஸென்டிர'வில் 'பரதேசிப் பெண்' என்ற பேசும் படக்காட்சியைப் பார்க்கும் பொருட்டுச் சென்றிருந்தேன். அப்பேசும் படக் காட்சியைப் பார்க்கச் சென்றதற்கு ஒரே ஒரு காரணந்தா னுண்டு. தமிழ் நாட்டு ஸினிமா நடிகர் ஸ்ரீமான் ராஜா சாண்டோ அப் படத்தில் நடிக்கிறார் என்று அறிந்ததே அக்காரணமாகும்.

ஸ்ரீமான். ராஜா சாண்டோவின் அரிய உயரிய நடிப்பை முன்னர் பலமுறை பார்த்ததைவிட அன்றுதான் உண்மையாய்க் கண்டு களித்தேன். ஸ்ரீமான் ராஜா சாண்டோவினது நடிப்பின் முன்பு, ஸ்ரீமான். பில்லிமோரியா, ஸ்ரீமதி. மாதுரி முதலிய கியாதி வாய்ந்த நடிகர்களது நடிப்பு மங்கி மறைந்ததென்றால், அது மிகையாகாது. ஸ்ரீமான். ராஜா சாண்டோ கடுமையான நோய்வாய்ப்பட்டு மீண்ட சில நாட்களுக்கெல்லாம் அப்படம் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. எனினும் அவரது நடிப்புத் திறமையில் சிறிதும் குறையில்லாதது குறிப்பிடத் தக்கது. தமிழ் மகன் ராஜா சாண்டோ இந்தியப் படக் காட்சி யுலகிலுள்ள ஒரு சில சிறந்த நடிகருள் தலைமையானவ ரென்பதே எமது முடிபு. இவ் வபிப்பிராயம் தவறாகத் தோன்றலாம்; அதன் பொருட்டு என் சொந்த அபிப்பிராயத்தை நான் மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. ஸ்ரீமான். ராஜா சாண்டோ நீடூழி வாழ்க! தமிழ் நாடு அந்தமட்டும் இவ்வொரு நடிகரையாவது பெற்றிருக்கிறதே என்பதைக் கண்டு என் மனம் பெரிதும் மகிழ்கின்றது. ஸ்ரீமான். ராஜா சாண்டோவின் ஜீவிய சரித்திரத்தை தமிழர்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆதலின் அவரது வரலாற்றைக் கீழே சுருக்கமாக அறியலாம்.

* * *

1895-ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பொள்ளாச்சி தாலுக்காவில், ஒரு டாக்டரது பனிரெண்டாவது குமாரராக ஸ்ரீமான். ராஜா சாண்டோ அவதரித்தார். அவர் மாணவரா யிருந்தபோது அவருக்குச் சினிமா உலகமே தெரியாது. அவரது பத்தொன்பதாவது வயதில் முதன் முதலாக அவர் கண்ட

படக்காட்சியின் பெயர், 'பாம்பேயின் இறுதி நாட்கள்' என்பதாகும். அவாது பள்ளிப் படிப்பு முடிவுற்றதும், அவரை அவாது பெற்றோர் தொழில் மேல் விடுத்தனர். ஆனால் நமது இளைஞர் ராஜாவுக்கோ தொழில்மீது சிறிதும் விருப்பமில்லை. உடற்பயிற்சி செய்வதிலும், அதற்கு ஏற்ற 'கசரத்நிலயம்' ஒன்றைக் காண்பதிலுமே அவாது கருத்து சென்றது. அவாது எண்ணம் ஈடேறும் சமயமும் நேர்ந்தது.

சில தேகப்பயிற்சி நிபுணர்கள் (இவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள்) கடலில் குளித்துக்கொண் டிருக்கையில், அவர்களில் ஒருவரைக் கடலலைகள் அடித்துக்கொண்டு போய்விட்ட தருணத்தில் இளைஞர் ராஜா அவரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தார். அதன் பயனாக அத் தேகப் பயிற்சி நிபுணர்களும் அவரைத் தங்களது கூட்டத்தில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டார்கள். இளைஞர் ராஜாவின் தேகப் பயிற்சிக் காட்சிகள் பல்லோர் மனத்தையும் கவர்ந்தன. அவாது திறமையால் கம்பெனிக்கு அமோகமான லாபம் கிடைத்தது. இத்தருணத்தில் சிலர் (கண்ட்ராக்ட்) ஒப்பந்தத்தின் பேரில் அவாது உதவியைப் பெறவும் முயற்சித்தனர். ஸ்ரீமான் ராஜா அவர்கள் ஒரு சமயம் ஒரு கண்டிராக்டரிடத்தில் வேலை செய்ய மறுத்து விட்டார். அதன் பயனாகப் புதுச்சேரியில், பார்க் டவுனில் அவர் ஓர் அறைக்குளிட்டு பூட்டப்பட்டார். அவரோ அன்றைய தினம் சென்னைக்குச் செல்ல வேண்டும். அவரை வேலைக்கு அன்றைய தினம் நியமித்த கண்டிராக்டர் நம்பிக்கை யிழந்து விட்டார். அச் சமயம் ஸ்ரீமான் ராஜா அவ்வீட்டின் கூரையைப் பிரித்துக்கொண்டு வெளிவந்து பக்கத்திலுள்ள மின்சார விளக்குக் கம்பத்தின் மீது தொத்தி, கீழே இறங்கி, ரயிலேறி கண்டிராக்டரிடம் போய்ச் சேர்ந்தார்; காட்சியும் இனிதே நடந்தேறியது.

நமது இளைஞர் ராஜா தமது தேகாப்பியாசத்தால் எங்கும் வெற்றிக் கொடி நாட்டி வரலானார். தென் தேசத்தில் அவாது 'உடல் வலிமை'க் காட்சிகளைப் புகழாதார் ஒருவருமிலர். கடைசியில் பம்பாய் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அவர் சென்ற சில நாட்களுக்குள் ஸ்ரீமான் ராஜாவிடத்தில் அந்நகர பிரமுகர்களில் பலர் தேகப்பயிற்சி முறைகளைக் கற்றுக் கொள்ள முன் வந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள், ஸ்ரீமான்கள்—உமார் சோபானி, பி. ஜி. ஹார்னிமென், ஜம்னாதாஸ் துவாரகதாஸ், நரோட்டம் மோராஜீ முதலியவர்களாவர். இவர்களில் இப்போது ஸ்ரீமான்கள் நரோட்டம் மோராஜீ, உமார் சோபானி ஆகியோர் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

ஸ்ரீமான் ராஜா சாண்டோ பம்பாயில் சில படக்காட்சிகளைக் கண்டார். அவர் ஒரு நாள் 'டாடார்' பகுதியிலுள்ள, 'நேஷனல் பிலிம் கம்பெனி'யின் பக்கமாய்ப் போய்க்கொண் டிருக்கையில்,

தாமும் ஏன் நடிகர் பதவிக்கு நிற்கலாகாது? என்ற எண்ணம் உண்டாயிற்று. மிகவும் சாந்தகுணமும் அதே சமயத்தில் மிகவும் மூர்க்க குணமும் உள்ள ஒரு நாடகபாத்திரர் அச்சமயம் அங்கு வேண்டி யிருந்தது. அதற்கு ஏற்கனவே பன்னிரண்டு நடிகர்கள் போட்டியிட் டிருந்தார்கள். ஸ்ரீமான். ராஜா சாண்டோவும் பதின்மூன்றாவது நபராக அப் பதவிக்கு நின்றார். அவரைக் கம்பெனி டைரக்டர்கள் பரீட்சைசெய்து பார்த்ததில், இரண்டு, மூன்று பேரை உண்மையிலேயே ஸ்ரீமான். ராஜா அடித்துக் கீழே வீழ்த்தி விட்டார். டைரக்டர்கள் 'அவர் நடிப்பதற்கு லாயக்

By Courtesy of 'Amusement weekly'

கற்றவரென்று' தள்ளிவிட்டார்கள். ஆசாபங்கமுற்ற ஸ்ரீமான். ராஜா சாண்டோ மிகவும் வருத்தத்துடன் கம்பெனியைவிட்டு வெளியே வருகையில், அக்கம்பெனியின் பிரதம டைரக்டர் அவரைச் சந்தித்து, 'ஒரு படக்காட்சியில் நடிக்க என்ன தொகை கேட்பீர்?' என்று வினவினார். ஸ்ரீமான். ராஜா அவர்கள், இலவசமாகவே வேலை செய்வதாகச் சொன்னார், எனினும் அவர் ராஜாவுக்கு ரூ. 100 சம்பளம் (அதாவது ஒரு படக்காட்சிக்கு) கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அதற்கு முன் ஸ்ரீமான். ராஜா அவர்களுக்கு நடிப்பில் பழக்கமில்லாத தால், சில டைரக்டர்கள் அவரது நடிப்பு 'பூரண தோல்வி' யெனக்

கூறினர்கள். அப்படமும் வெளிவந்தது. அநேகர் ஸ்ரீமான். ராஜாவின் நடிப்பை மனமாறப் புகழ்ந்து பேசலாயினர். அவரை லாயக்கற்றவர் என்று இகழ்ந்த டைரக்டர்களே, அவரது நடிப்புத் திறமையை மிகவும் வியந்து 100 ரூபாயுடன் 50 ரூபாய் வெகுமதியாகப் போட்டுத் தந்தார்கள். இராஜா அக் கம்பெனியில் மற்றுமோர் படத்திலும் நடித்தார்.

பின்னர் அவர் கோஹினூர் பிலிம் கம்பெனியில் சேர்ந்தார். ஆறு மாதங்களுக்கு அவருக்கு 3000 ரூபாய் சம்பளமாய்த் தரப்பட்டது. மற்றொரு ஆறுமாதமும் அங்கு வேலை செய்தார். இதனிடையில் மெஜஸ்டிக் கம்பெனி படக்காட்சியொன்றில் நடித்துள்ளார். மறுபடியும் கோஹினூர் கம்பெனியில் 6 படங்களில் நடித்தார். அவர்தான் அச்சமயம் அக்கம்பெனியில் பிரதம கதா நாயகராக இருந்து கீர்த்தி பெற்றவர்.

ஸ்ரீமான். ராஜா சாண்டோ அவர்கள், 'உண்மையின் வெற்றி' 'டைப் அடிக்கும் பெண்' 'கற்ற மனைவி' 'குணசுந்தரி' 'சம்ராட் சிலாதித்யன்' 'விஸ்வமோஹினி' 'கிரகலக்ஷ்மி' 'சந்திரமுகி' 'ராஜலக்ஷ்மி' 'காதற் சோதி' 'கணவனும் மனைவியும்' 'அநாதைப்பெண்' 'உஷாசுந்தரி' 'பேயும் பெண்ணும்' 'ஹிந்துஸ்தானத்தின் வீரபுருஷன்' முதலிய பற்பல படக்காட்சிகளில் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அவருடன்கூட மேற்கூறிய அநேக படங்களில் ஸ்ரீமதி கோஹரும் நடித்திருக்கிறாரென்பது சினிமாக் காதலர்கள் அறிந்த விஷயமேயாகும்.

* * *

ஸ்ரீமான். ராஜா சாண்டோவின் பார்வையிலிருந்த சென்னை, 'அஸோஸியேடட் பிலிம் கம்பெனி' அழிந்து போனதைப்பற்றி நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. தற்பொழுது இவர் பம்பாய் இம்பீரியல் பிலிம் கம்பெனியில் இருக்கிறார்.

தமிழ் நாட்டில் ஒரு நிலவரமான—தூய்மை எண்ணத்தோடு ஒரு படக் காட்சிசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதில் தமிழர் ஸ்ரீமான். ராஜா சாண்டோ அவர்கள் நடித்து மிக முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அதன் வழியாகத் தமிழரது பெருமை பாரெங்கும் பரவ வேண்டும். இதுவே எனது பேரவா.

வேதாந்தகேசரி பரிபூரணனந்தர்

[ஜீவா]

வேதாந்தகேசரி பரிபூரணனந்த சுவாமிகள் என்னும் பெயருடைய துறவி யொருவர், பல ஊர்களையுஞ் சுற்றிக்கொண்டு, கடைசியாகத் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள பாளையங்கோட்டையில் முகாம் போட்டார். அவரது சுந்தர வேடத்தையும், பூங்காவி யுடைக்கோலத்தையுங் கண்ட அவ்வூரிலுள்ளார் அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்யலாயினர். மற்றும் பலர் அவருக்குச் சிஷ்யர்களாயினர். அவர் அம்மாணக்கர்களுக்குத் தினந்தோறும் சசிவன்ன போதமும், கைவல்ய நவநீதமும் பாடஞ் சொல்லி வந்தார். அவரது புற வொழுக்கமும், நா வன்மையும் யாவரையும் கவர்ந்து வந்தன. சிஷ்யர்கள் எல்லாம், சாக்ஷாத் சிவபெருமானே தங்களுக்கு ஞானுபதேசஞ் செய்ய குரு வடிவங்கொண்டு வந்திருப்பதாக அவரை எண்ணினர்.

இவ் வாறிருக்க, ஒரு நாள் மாலை பரிபூரணனந்த சுவாமிகள் தம் சிஷ்யர்களுக்குக் கைவல்ய நவநீதம் பாடஞ் சொல்லிக்கொண் டிருக்கும்போது, குளத்தி லிருந்து தண்ணீரெடுத்துச் செல்லப் பெண்கள் சிலர் அவ்வழியாகச் சென்றனர். நக்ஷத்திரக் கூட்டங்களின் நடுவே சந்திரன் பிரகாசிப்பது போல, அம் மகளிர் கூட்டத்தில் பேரழகு வாய்ந்த மெல்லிய லொருத்தி, இடைதுவள குடமொன்றைத் தாங்



கிச் செல்வதைச் சுவாமிகள் கண்டுவிட்டார். அவரது கருணு கடாக்ஷம் அப் பெண்ணின்மீது வீழ்ந்ததுதான் தாமதம்; தம்மை மறந்தார்; தம்மைச் சூழ்ந்திருந்த சிஷ்யக் கூட்டங்களை மறந்தார். அவர் மனம் அம்மட நல்லாளைப் பின்பற்றிச் சென்றது. அவரால் அதற்குமேல் பாடஞ் சொல்ல முடியவில்லை. தம் மன நிலையை எங்குத் தம் சிஷ்யர்கள் உணர்ந்து கொள்வார்

களோ என்று அஞ்சிய அவர், திடீரென்று மயக்கமுற்று மூர்ச்சை யுற்றது போல் பாசாங்கு செய்தார். உண்மை யுணராத சிஷ்யர்கள், தங்கள் ஆசிரியர் எதிர்பாராதவாறு மயக்க முற்றதைக் கண்டு பதறிப்போய், அவரை மூர்ச்சை தெளிவிக்கவேண்டிய சைத்தியோபசாரங்களைச் செய்யலாயினர். நீண்ட நேரமாகியும் சுவாமிகள் கண் விழிக்காததால், சிஷ்யர்கள் அவரை மெல்லத் தூக்கி மடத்தினுள் கொண்டு சென்று புலித்தோல் பரப்பப் பட்டிருந்த படுக்கையில் கிடத்தி மயில் விசிறி கொண்டு விசிறினர்.

சிறிது நேரங் கழித்து, சுவாமிகள் மூர்ச்சை தெளிந்தவர்போல் நடித்து கண் விழித்து சிஷ்யர்களை மிரள மிரளப் பார்த்தார். பின்னர் அவர் சிஷ்யர்களை யெல்லாம் பார்த்து, தமக் கொன்றுமில்லை யென்றும், அவர்க ளனைவரும் வீட்டுக்குச் சென்று மறுநாள் வரலாமென்றும் கையால் சைகை காட்டினார். ஆசிரியர் கட்டளைப்படியே எல்லோரும் அவரவர் இல்லத்துக்கு ஏகினர். ஆனால் மாசிலாமணி என்னும் மாணாக்கன் மாத்திரம் அவரை அந்நிலையில் விட்டுப் பிரிய மனமில்லாது தயங்கி நின்றான். அவன் தம்மிடம் உண்மை யாகவே அன்பு பூண்டொழுகுவதைப் பரிபூரணானந்தரும் அறிவார்.

எனவே அவர், மற்றெல்லா சிஷ்யர்களுஞ் சென்றும், மாசிலாமணி மட்டும் தம்மை விட்டு நீங்காது கவலையோடு நிற்பதைக்கண்டு புன்சிரிப்போடு அவனை நோக்கி, 'மாசிலாமணி! ஏன் கவலையோடு நிற்கிறாய்? எனக் கொன்றும் இல்லை. திடீரென்று யான் மயக்கமுற்றதைக் கண்டு நீங்கள் திடுக்கிட்டது நியாயமே. ஆனால் என்னை மயக்கியது எதுவாயிருக்குமென்று உன்னால் ஊகித்துச் சொல்ல முடியுமா? என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவ் வொப்பற்ற பொருளை உன்னால் கண்டுபிடிக்க முடியாது' என்று கூறினார். தம்மிடம் அன்பு கொண்டுள்ள அவனைக் கொண்டே அப் பேரழகியைத் தாமடைய வேண்டுமென்று சுவாமிகள் எண்ணினார்.

பரிபூரணானந்தரது வஞ்ச மனத்தை யுணராத மாசிலாமணி, 'சுவாமிகளே! எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. தாங்கள் சொன்னால் தெரிந்து கொண்டு, அதற்கு வேண்டுவன செய்கிறேன்' என்று கூறினான்.



உடனே பரிபூரணானந்தர் மகிழ்ச்சியாக, 'அது இன்னதென்று சொன்னால் நீ வேண்டுவன செய்வாயா? ஈது உண்மையா?' என்று கேட்டார்.

'சுவாமி! தங்களுக்காக என் உயிரையுந் தத்தஞ் செய்யத் தயாரா யிருக்கிறேன். தாங்கள் விரும்பியதை முடிப்பேன் என்பதை உறுதியாக நம்புங்கள்' என்று உறுதி கூறினான்.

அவன் அளித்த உறுதிமொழியைக் கேட்டு மனம் பூரித்த பரிபூரணனந்தர், தாம் பார்த்த காரிகையின் வனப்புகளை யெல்லாம் அவனிடம் விரித்துரைத்து, அந்நங்கையைத் தாம் கூடாவிட்டால் உயிரிழப்பது திண்ணமென்றும், எவ்வாறுகிலும் அவளை யடைய முயற்சி செய்யவேண்டுமென்றுங் கூறினர்.

ஆசிரியர் வார்த்தையைக் கேட்ட மாசிலாமணி, திடுக்கிட்டானெனினும், அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே தன் கடமையென எண்ணினன். ஆகவே, அவன் அப்பெண்ணின் அங்க அடையாளங்களைக் கூறும்படி ஆசிரியரைக் கேட்க, அவர் தாம் கண்ட வனிதையின் அங்க அடையாளங்களை யெல்லாம் சொன்னர்.

இதைக் கேட்ட மாசிலாமணி மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். 'என்னிடம் உள்ளதையே கேட்டீர். இன்றிரவே அவளைத் தங்களிடம் சேர்ப்பிக்கிறேன். தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பாக்கியத்தைப் பெற்று தன்யனுனேன்' என்று வாய்விட்டுக் கூறினன். இதைப் பார்த்த பரிபூரணனந்தர், இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று எண்ணினர். பின்னர் ஆஸ்வாசப்படுத்திக் கேட்டபோது, மாசிலாமணி, 'சுவாமி! தாங்கள் பார்த்த பெண் என் மனைவியேயாகும். நான் இதோ ஓடிப்போய் அவளை அழைத்து வருகிறேன். நானே தங்களுடைய பொருளாயிருக்க, என் மனைவியும் தங்கள் சொத்தன்ருே? தங்கள் சொத்தை யனுபவிக்கத் தங்களுக்கல்லாது வேறு யாருக்கு உரிமையுண்டு' என்று கூறிப் பரிபூரணனந்தர் காலில் விழுந்து எழுந்து தன் வீட்டை நோக்கி ஓட்டமாய் ஓடினன்.

தாம் கண்டு காமங்கொண்ட பெண் மாசிலாமணியின் மனைவி யென்பதை அறிந்த பரிபூரணனந்தர் முதலில் நடுக்கங்கொண்டாரெனினும், மூடபக்தியால் அவனே தம் வார்த்தையை வேதவாக்கியமாக எண்ணித் தம்மிடம் அவளைச் சேர்ப்பதாகச் சொல்லியதைக் கண்டு சிறிது தைரியங்கொண்டு, பலவாறு மனக்கோட்டை கட்டியவண்ணம் மாசிலாமணி மனைவியின் வருகையை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தார்.

பரிபூரணனந்தரை விட்டோடிய மாசிலாமணி, தன் வீட்டை யடைந்து மனைவியைப் பார்த்து, 'காந்தா! இன்றுதான் நாம் ஜென்ம சாபல்யமடைந்தோம். உன்னைப் பார்த்து சுவாமிகள் ஆசைகொண்டிருக்கிருர். உடனே எதிர்வார்த்தை சொல்லாது என்னேடு வந்து, இன்றிரவு அவர் விருப்பத்தைப் பூர்த்திசெய். தயங்காதே!' என்று பதைபதைப்போடு கூறினன்.

தன் கணவன் கூறிய வார்த்தையைக் கேட்ட காந்தாமணி என்னுங் கற்பரசி, 'சிவசிவா' என்று கூறிக் காதைப் பொத்திக்கொண்டு கண்ணீர் விடலானள்; தன் அன்பனுக்குச் சித்தசபல மேற்பட்டுவிட்டதோ என்று எண்ணி ஏங்கினள்; தான் வதுவைசெய்த மனைவியை வேருெருவனுக்கு ஆட்படுத்தும் ஆடவரும் இவ்வவனியில் உண்டோ? என்று வியப்புற்ருள். இதுகாறும், கணவன் வார்த்தைக்கு மாறுசொல்லி யறியாத அம்மங்கை இப்போது என்ன செய்வதெனத் தோன்ருது திகைத்து நின்ருள். மாசிலாமணியோ, குருகடாக்ஷம் தனக்குப் பூரணமாய் ஏற்பட்டிருப்பதையும், அவாது இவ்விருப்பத்தை முடித்து வைப்பதே அவருக்குக் காணிக்கை செய்வதாகுமென்றும் பன்னிப்பன்னிக் கூறி அவளைத் தன்னுடன் வருமாறு வற்புறுத்தினன்.

பேதைப்பெண்! என்செய்வாள் பாவம்! கடைசியாகத் தன்னுள் ஒருவித முடிவுக்கு வந்து, தன் கணவன் வார்த்தைக்கு இணங்கி, வீட்டுக்காரியங்களை யெல்லாஞ் செய்துவிட்டு, உணவாதிகளை முடித்துக்கொண்டு இரவு 9-மணிக்குக் கணவனுடன் புறப்பட்டாள்.

மாசிலாமணி, தன் வேண்டுகோளுக் கிணங்கிய மனைவியை வாயாறப் புகழ்ந்துகொண்டே மடத்தை யடைந்து, காந்தா மணியைப் பரிபூரணனந்தர் அருகு விட்டு, அவர் திருவடிகளில் விழுந்து, 'சுவாமி! இதோ தங்களுடைய உடைமை! தங்கள் விருப்பம்போல் இதை நடத்தலாம்? நான் சென்று காலே வருகிறேன்' என்று கூறி வீடு நோக்கிச் சென்றான்.



மாசிலாமணி தம்மிடம் பேரன்புகொண்டு செய்த அச் செயற்கரிய காரியத்தைக் கண்டு பரிபூரணனந்தர் பேரச்சங் கொண்டார். தம் கூடா வொழுக்கத்துக்கும், அவனது தூயமனத்துக்கும் உள்ள வேற்றுமையைக் கண்டு தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டார். எனினும், காந்தாமணியின் பேரழகு அவரை அடிமையாக்கிவிட்டது. தூரத்தே கண்டு மயங்கிய அவர் தம்மருகே தனியே இருப்பதைப் பார்த்து நிலைகலங்கா திருப்பாரோ! எனவே, அவர், காந்தாமணியைத் திரும்பிப் பார்த்து புன்னகையோடு, 'என் மனத்தைக் கவர்ந்த மாதே! உன் மெல்லிய இடை தள்ளாடுகிறது. நிற்காதே! இப்படி வந்து உட்கார்' என்று கூறியவண்ணம் அவளருகே நெருங்கினார்.

காந்தாமணி சிறிது தூரவிலகி நின்று முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்து, 'சுவாமிகளே! தங்கள் வார்த்தைக்கு மறு உத்தரம் உண்டோ! நான் எப்போது தங்களுடையவளாய்விட்டேனே, அப்போதே தங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியவளாய்விட்டேன். ஆனல் ஒன்று—'என்று கூறி வந்தவள் சுற்றுமுற்றும் மருள மருளப் பார்த்தாள்.

பரிபூரணனந்தர் காந்தாமணியின் வார்த்தையைக் கேட்டு அப்படியே சொக்கிப்போய், 'கண்ணே! ஆனல் ஒன்றென்ன? என் சுற்றுமுற்றும் மருள மருளப் பார்க்கிறாய். யாராகிலும் பார்த்துவிடப் போகிறார்களென்ற பயமா? இங்கு யாரும் இல்லை. இம் மடம் இவ்வூருக்குப் புறம்பே இருக்கிறது. இந் நேரத்தில் இங்கு யாரும் வரமாட்டார்கள். அப்படி யாராகிலும் வந்தாலும், கதவு சாத்தப்பட் டிருப்பதால் இங்கு நடப்பது அவர்களுக்குத் தெரிய ஏதுவில்லை. ஆதலால் நீ பயப்படாதே! பெண்ணே!' என்று பரிவோடு கூறிக் கிட்ட நெருங்கினார்.

அப்போதும் காந்தாமணி அவரைத் தன்னருகே வரவிடாமல் பின்னுக்குச் சென்றவண்ணம், 'தாங்கள் இருக்கும்போது எனக்குப் பயமென்ன? அவ்வாறொன்றுமில்லை. ஆனல் இங்கு யாரோ இருப்பதாக எனக்குத் தோற்று

கிறது. நாம் இருவரும் ஒன்று கூடி மகிழ இருக்கையில், வேறொருவர் மறைந்திருந்து நம்மைக் கவனித்தல் தகுதியா?' என்று கூறினாள்.



பரிபூரணானந்தர் திடுக்கிட்டுச் சுற்று முற்றும் திருவிப் பார்த்து, 'ஆரமுதே! இங்கே யாரும் இல்லையே! நான் இருக்குமிடத்தில் மறைந்து நின்று கவனிக்க எவனுக்கேனும் தைரியம் வருமா? வீணாக என் மனச்சபல முறுகிறாய்? எதோ! இங்கு வா! ஒரு முத்தந்தா! கண்ணே!' என்று கூறி விரகதாபம் தாங்க மாட்டாமல் தவித்தார்.

மேலும் காந்தாமணி ஒரே பிடியாகப் பேசத் தொடங்கி, 'என்ன சுவாமிகளே? தாங்கள்கூட மற்றவர்களைப்போல இவ்வளவு அவசரப்படலாமா? கிணற்று நீரை வெள்ளங்கொண்டு போகப் போவதில்லை. இருந்தாலும், அதோ ஒளித்திருப்பவரை வெளியே துரத்தினாலல்லது நான் தங்களோடு கூடிக் குலாவ முடியாது! நானென்ன பரத்தையா? விலைமகள்கூட மற்றவர் பார்க்க ஒருவனைக் கூடமாட்டாளே! அவ்வாறிருக்க தாங்கள் பெண் பாலாகிய என்னை மற்றொருவர் கவனிக்க விட்டு அவமானப் படுத்தலாமா?' என்று கேட்டாள்.

வேதாந்தகேசரி, மேலும் பதைத்தவராய், 'என்ன! இங்கு யார் ஒளித்திருக்கிறது? ஒருவருமில்லையே! உன்புத்தி பேதலித்துவிட்டதா என்ன? நீ பார்ப்பதாகச் சொல்லுகிற ஆள் எங்கே? எனக்குக் காட்டு' என்று வினாவினார்.

காந்தாமணி, 'அதோ பாரும்! அங்கேதான் ஒளிந்திருக்கிறார் அந்த ஆள். தங்களுக்குத் தெரியவில்லையா? சரியாகப் பாரும்' என்று ஒரு மூலையைச் சுட்டிக் காட்டிக் கூறினாள்.

பரிபூரணானந்தர் அவ்விடத்தைக் கூர்ந்து பார்த்து ஒருவரையும் காணப் பெறாராய் மயங்கிக் காந்தாமணியை நோக்கி, 'என்ன பெண்ணே! எனக்கு விளையாட்டு காட்டுகிறாயா? ஒருவரையுங் காணவில்லையே! உன் கண்களுக்குத் தெரியும் அந்த ஆள் எனக்குத் தெரியாமல் போவதேன்? எங்கே! அருகே சென்று காட்டு!' என்று படபடப்போடு கேட்டார்.

காந்தாமணி கலகலவென நகைத்து, 'என்ன சுவாமிகளே! ஏழைப் பெண்ணாகிய என் கண்களுக்குத் தெரியும் அக்கள்வன், மகா ஞானியாகிய தங்கள் கண்களுக்குத் தெரியாமல் போவது ஆச்சரியமாகவே இருக்கிறது. ஒரு வேளை மகா வீரராகிய தங்கள் கண்களுக்குத் தென்பட்டால் எரித்துச் சாம்பராக்கி விடுவீரென்ற பயம்போலும்! இப்போதாகிலும் சரியாகத் தாங்கள் கண்களைத் திறந்து பாரும். நான் காட்டும் ஆள் இங்கேதான் இருக்கிறான். நீ செய்யும் படிற்றொழுக்கத்தைக் கண்டு அவன் சிரிக்கிறான். பிறருக்குக் கைவல்யம் முதலிய ஞான நூல்களைப் போதிக்கும் உனக்கு அவன் யாரெனத்

தெரியவில்லையா? அடே! முட்டாளே! அறிவில்லாப் பிண்டமே! புலி பசுத் தோலைப் போர்த்து, பிற உயிர்களைக் கைப்பற்றுவதுபோல், நீ காஷாய வேடத்தைப் பூண்டு மகா ஞானிபோல நடித்து அயலான் மனைவியை இச் சித்து எரிவாய் நரகத்துக்குச் செல்லப் பார்க்கிருய். நான் உன்னிடந் தனியாக அகப்பட்டுக் கொண்டேனென்று என்னைக் கற்பழிக்க நினைத்தாய். உன் சூழ்ச்சியை ஒருவன் பார்த்துக்கொண் டிருக்கிருன் என்பதை நீ மறந்தாய். உன் கூடா வொழுக்கத்தை யாரும் அறியமாட்டார்களென்ற துணிவோடு இக்காரியத்தில் இறங்கிஞய்! உலகத்தில் ஒவ்வொருவன் செய்யும் செயல் களையும் மேலிருந்து ஒருவன் பார்த்துக்கொண் டிருக்கிருன் என்பதை இப் போதாகிலுந் தெரிந்துகொண்டாயா! இவ்வுலகில் யாரை நீ ஏமாற்றி ஞலும், சொலற்கரிய சூழலா யிருக்கும் கடவுளை ஏமாற்ற முடியாது. அவன் கண்களையும், காதையும் மூட ஒருவராலும் முடியாது. அவனுக்கு எங்குங் கண்கள்! எவ்விடத்தும் காதுகள். அவன் ஒரு சிறு செயலையும் அறி வான்; சிற் றரவத்தையுங் கேட்பான். ஆதலால் நீ அவனுடைய கோபத் துக்கு ஆளாகாது இருக்கவேண்டுமானல், இனியேனும் இவ்விதத் தகாச் செயலைச் செய்ய நினைக்காதே! பிறர் மனைவிமாரை உனது தாயென நினை! அவர்களுக்கு மனத்தாலுங் கேடுசெய்ய எண்ணுதே! நீ உயிர் பிழைக்க வேண்டு மானல் இவ்விடத்தைவிட்டு உடனே போய்விடு. நாளை உன் செயலை இவ் வூரார் அறிந்தால் உன்னை உயிரோடு விடமாட்டார். வேறெங்காகிலும் போய்ப் பிழைப்பாயாக!' என்று நீண்ட பிரசங்கஞ் செய்தாள்.

காந்தாமணியின் மொழிகளைக் கேட்ட பரிபூரணனந்தர் அப்படியே மலைத்து நின்றுவிட்டார்; தம்மை ஒரு ஏழைமகள் ஏமாற்றி அவமானப் படுத்தி விட்டாள் என்பதை யறிந்து உடல் குன் றிப் போனர். அவளது அறிவுரைகளைக் கேட்டு அவர் மனந் திருந்தியது. தாம் செய்தது தவறென உணர்ந்த அவர், உடனே காந்தாமணியின் பாதங்களில் தாழ்ந்து வணங்கி தழுதழுத்த குர லோடு, 'அம்மா! என்னை ஆட்கொண்ட தெய்வமே நான் அறியாமையால் செய்த தவற்றைப் பொறுத்து என்னை மன் னிக்க வேண்டும். நான் பல நன்னூற்களை ஓதி யுணர்ந்தும், பிறர்க் குரைத்தும தானடங்காப் பேதையிற் பேதையாயி னேன்! நம் செயலை யெல்லாம் ஆண் டவன் மறைந்திருந்து பார்ப்பான் என்பதையும் மறந்தேன். உன்கட்டழகில் ஈடுபட்டு அறிவிழந்தேன். அதனல் செய்யத் தகாத காரியத்தைச் செய்யத் துணிந்தேன். இப்போது உன் அறிவுரை கேட்டு என் மனம் திருந்தி விட் டது. இனி நான் இவ்வித தகாத காரியங்களைச் செய்ய மனதாலும் நினை யேன். நீயே எனக்குத் தந்தையுந் தாயும் குருவுந் தெய்வமும் எல்லாமும். உன்னை நான் அப் பராசத்தியாகவே நினைக்கிறேன். என் பிழையைப் பொறுத்தருள்வாய் தேவியே' என்று கெஞ்சி மன்றடினர்.

காந்தாமணி தான் தெய்வத்தி னருளால் அக்கொடியனின் கொடுஞ் செயலினின்றுந் தப்பியதற்காக இறைவனை உள்ளுற வாழ்த்திப் பரிபூரணனந் தரை நோக்கி, 'சுவாமிகளே! எழுந்திரும். தங்களை ஆண்டவன் மன்னிப்பான்! இனி தாங்கள் இவ்வித தீய காரியங்களைச் செய்வதில்லை என்று உறுதி மொழி தந்தால் போதும். நான் வந்த வேலை தீர்ந்துவிட்ட தல்லவா? நான் 'போய்வருகிறேன்' என்று கூறி அம் மடத்தைவிட்டு வெளியேறி இருளில் தன் வீட்டைநோக்கி விரைந்து நடந்தாள்.

காந்தாமணி வீடு சென்றதும், தன் கணவனாகிய மாசிலாமணியிடம் விஷயங்களைச் சொல்லி, அவன் பரிபூரணனந்தரிடம் கொண்டிருந்த பிரேமையை ஒழித்து இருப்பா ளென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

மறுநாள் சிஷ்யர்க ளெல்லாம் மடத்துக்கு வந்து வேதாந்தகேசரி பரிபூரணனந்த சுவாமிகளைப் பார்த்தனர். அவர் காணப்படவில்லை. மடம் காலியாக இருந்த தறிந்து அவரவர் வீடு சென்றனர்.

மனிதன் உடல் மதிப்பு ரூ. 5—10—0

சமீபத்தில் கல்கத்தாவில் நடை பெற்ற 20-வது இந்திய ரசாயன சாஸ்திரக் காங்கிரசில் தலைமை வகித்துப் பேசுகையில் டாக்டர் நியோகி என்பார் கீழ்க் கண்ட சில ரஸமான விஷயங்களை வெளியிட்டார்:—

சரியான வயதிலுள்ள ஒரு மனிதனுடைய சரீரத்தில் 7-சோப்புக் கட்டிகளைச் செய்யக் கூடிய அளவு கொழுப்பு இருக்கிறது; ஒரு இரண் டங்குல ஆணியைப் பண்ணக் கூடிய இரும்பு இருக்கிறது; சர்க்கரைத் தொழிற்சாலைகளில் சர்க்கரையை அள்ளிக் கொட்டுவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு பிரம்மாண்டமான கரண்டியை நிரப்பக் கூடிய அளவிற்குச் சர்க்கரை இருக்கிறது; 4 அடி நீளத்திற்குச் சுண்ணும்பு அடிக்கக் கூடிய சுண்ணும்பு இருக்கிறது. 55 தீப் பெட்டிகளைச் செய்வதற்கான தீப்பாஷாணம் இருக்கிறது; இது தவிர 13 காலன் தண்ணீரும், எராளமான கந்தகமும், மக்னீஷியம் என்ற ரஸாயனப் பொருளும் இருக்கிறது. இவை அனைத்தும் கொஞ்சங்கூட அழியாமல், சுத்தமாக விருக்குமானல் ஒரு மனிதனின் மதிப்பு 7 ஷில்லிங் 6 பென்ஸாகும்; அதாவது 5 ரூ. 10 அணு. ஆனல் மேற்கூறிய அவ்வளவு சாமான்களையும் அவ்வளவு அளவிற்கு, அவ்வளவு பணத்தைப் போட்டு வாங்கினுல் அவற்றைக் கொண்டு ஒரு மனிதனை, ஒரு சித்திரக் குள்ளனைக்கூட நாம் சிருஷ்டிக்க முடியாது.

நான் கண்ட பேய்

[திரு. மே. ஜானகிராமன்]

ஒரு நாள் இரவு நான் என்னுடைய கட்டிலின்மீது படுத்து உறங்கிக்கொண்டிருக்கையில், திடீரென்று விழித்துக்கொண்டேன். மறுபடியும் தூங்க ஆரம்பித்தேன். ஆனால், தூக்கம் வரவில்லை. காற்றோ வீசவில்லை. மிகப் புழுக்கமாயிருந்தது, விசிறியெடுத்து சிறிதுநேரம் விசிறிக்கொண்டு மறுபடியும் படுக்கையில் படுத்தேன். நித்திராதேவியை, வருந்திவருந்தியழைத்தாலும் வரமாட்டேன் என்று பிடிவாதம் செய்தாள். பிறகு, சிறிதுநேரம் மாடியின்மீது உலவிவிட்டு வந்து படுப்போமென்று, மேன்மாடிக்குச் சென்றேன். அங்கு நான் உலவிக்கொண்டிருக்கையில், எனக்குப் 'பேய்,' 'பிசாசு' களைப்பற்றி பலர் சொன்ன செய்திகள் நினைவிற்கு வந்தன. நான் 'பேய்' 'பிசாசுகள்' இல்லை என்ற தீவிரமான நம்பிக்கைக் கொண்டவன். யாராவது பேய் பிசாசுகளைப்பற்றிச் செய்திகள் சொன்னால், நான் அவைகளை நம்புவதே கிடையாது. சிலர், தாமே நேரில் கண்டதாகவும், அதனுடன் பேசினதாகவும் கூறுவர். அவர்கள் 'குண்டு' விடுவதைப்பற்றி நான் பரிகாசம் செய்வது வழக்கம்.

இப்படி நான் உலவுகையில், என் பின்னால் ஏதோ ஒரு உருவம் என்னைப் பின்தொடர்வதுபோல் தோன்றிற்று. நான் சிறிதும் அச்சமடையாதவனாய் உலவிக்கொண்டிருந்தேன். அவ்வுருவம் என்னைப் பின் தொடர்வதை விடவில்லை. நான் தைரியத்தைக் கைவிடாதவனாய்ச் சிறிதுநேரம் உலவினேன். ஒவ்வொரு தடவையும் அது என்னைப் பின் தொடர்வதை உணர்ந்தேன். 'பேயோ' 'பிசாசோ' என்று என் மனத்தில் 'காபரா' உண்டாயிற்று. பேயைப் பற்றிய கதைகளெல்லாம் என் அகக்கண் முன் தோன்றி என்னைப் பயமுறச் செய்தன. இருந்தாலும், தைரியத்தைக் கைவிடாமல், நான் உலவும்போதெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்தேன். ஒன்றும் புலப்படவில்லை. சென்று படுத்துக்கொள்ளலாமாவெனத் தோன்றிற்று. ஆனால், அதைக் கண்டுபிடியாமல் போக மனம் வரவில்லை. மறுபடியும் உலவினேன். அதைக் கண்டுபிடிக்கத் திரும்பும்பொழுது, அது மறைந்துவிடுகிறது. என்ன செய்வதென்று தோன்றவில்லை. எப்படியாவது அவ்வுருவத்தைக் கண்டுபிடியாமல் விடுவதில்லையெனத்

தீர்மானித்துக்கொண்டு நாலாபுறமும் கைப்பிடிச் சுவரெல்லாம் தேடிப் பார்த்தேன். ஒருவரையும் காணோம். பேயோ, என்னமோ என்று நினைத்து பயத்துடன், சுவரைப் பிடித்துக்கொண்டு திரும்புகையில் அதைக் கண்டுபிடித்துவிட்டேன். அதைக் கண்டுபிடித்த பின், என் பயமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போயிற்று.

வாசகர்களே! அது யார் என்று உங்களால் சொல்லமுடியுமா? என்ன யோசிக்கிறீர்கள்? இவ்வளவு நேரமா? சரி, நானே சொல்லி விடுகிறேன். உங்களுக்கு ஏன் கஷ்டம்! அவ்வுருவம், தெருவிலிருக்கும் 'எலக்டிரிக்' வெளிச்சத்தா லுண்டான என் நிழலே.

மனைவி:—ஆருத்திராதரிசனம் பார்க்கச் சிதம்பரம் போவோம் புறப்படுங்கள்.

கணவன்:—முடியாது. நமக்கிருக்கிற கடன்களை யோசிக்க வேண்டாமா?

மனைவி:—அங்கே சென்று சாவகாசமாய் யோசித்துக் கொண்டால் போச்சு.

—விகடராமன்

* * *

காதலன்:—கண்ணே, கொஞ்ச காலத்துக்கு நமது கலியாணத்தை வெளியிடக் கூடாது.

காதலி:—நானும் அதுவேதான் எல்லோருக்கும் சொல்லிக்கொண் டிருக்கிறேன்.

* * *

ஆசிரியர்:—பிள்ளைகளே, சிவாரத்திரி என்றால் என்ன? யாருக்காவது தெரியுமா?

என்ன விழிக்கிறீர்களே?

ஒரு சிறுவன்:—அதுதான் சிவாரத்திரி.

—விமலா

யஞ்ஞோபவீத மஹான்மியம்

—:o:—

[திரு. B. L. சாரி]

இச்சு, க. த. ச. கல்லூரியில் ஏழாவது வகுப்பில் கல்வி பயிலும் ஓர் பிராமணச் சிறுவன். வயது 12. பிள்ளைகளுக்கு 18 வயதிற்குள் உபநயனம் செய்ய வேண்டியது கிரமம். கிச்சுவின் தகப்பனார் ஓர் வைதிகர் என்றாலும், கிச்சுவின் 'இரண்டாம் பிறப்பு'ச் சடங்கிற்கு விரைவில் தாமே பணம் செலவழிக்க விரும்பவில்லை.

ஆவணி(யா) அவிட்டம் ஆடியிலேயே இனிது நிறைவேறியது. 'கிச்சு'விற்கும் ஒரு 'கள்ளப்பூணல்' கிடைத்தது. அவனுடைய தொந்தி தளிரை, 'பூணல்' குறுக்கிட்டதும், அவன் தனக்குள் ஓர் உண்மையான பிராமணக் குஞ்சு ஆனதாக எண்ணி அகமகிழ்ந்தான்; தன் வகுப்பு மாணவர்களுக்கும் அதைப் பெருமையாகக் காண்பித்தான்.

மருதமுத்து கிச்சுவின் சகபாடி. கிச்சு மருதமுத்துக்கு 'ஆவணியாவிட்டத்தின்' மாட்சிமையை, மார்கெட்டு கறிகாய் வாங்கியது முதல், வடைபாயச சாப்பாடு முடிய எல்லா நிகழ்ச்சிகளேயும் கிரமமாகச் சொல்லி முடித்தான். மருதமுத்து திடீரென்று 'பூணூல் தரிப்பதால் என்ன பயன்' என்று ஒரு சின்ன வினு எழுப்பினன். கிச்சு விழித்தான்; தகப்பனரைக் கேட்டுச் சொல்லுவதாக நழுவினன்.

மாலை. கோவிந்த கனபாடிகள் மூக்கைப் பிடித்துக்கொண்டு குளக்கரையில் அமர்ந்திருந்தார். கிச்சு கனபாடிகளை யணுகி '‌அப்பா-பூணூலை...... பிரும்ம முடிச்சை ஏனப்பா புடிச்சுண்டு ஜபம் பண்றே.........' போன்ற சந்தேக வினுக்களைப் பற்பலவாக அடுக்கினன். பிரமித்தார் கனபாடிகள். கண்களில் தீப்பொறிகள் வீசின. 'அடே பயலே' என்று கர்ஜிக்கத் தொடங்கவே, எடுத்தான் ஓட்டம் கிச்சு. கோவிலின் 'சாயரக்ஷை'யைக் கண்டாமணி ஞாபகப்படுத்தியது. கிச்சு மடப்பளி அடைந்தான்.



மடப்பளி அதிகாரி, பரிசாரக இராமன். அவன் பேழைமீதி



விருந்து அதிரசத்தை எடுக்கும்போது விருச்சிகம் கைவிரலில் முத்தமிட அவ்விரலுடன் கொஞ்சிக் குலாவி மேளதாளமில்லாமல், முகாரி ராகம் பாடிக்கொண்டு, நாட்டிய மாடிக்கொண் டிருந்தான். கொட்டிய விரலைச் சுற்றி தன் பூணூலை இறுகக் கட்டி யிருப்பது நமது கிச்சுவின் நோக்கில் தாக்கியது. முதல் பயன் தெளிவாக விளங்கிவிட்ட தல்லவா?

விரைந்து வீட்டினுட் புகுந்து அவசர அவசரமாக 'இலெவன் பாயிண்ட்ஸ் (eleven points) குறித்தான்:-

(1) ஒற்றைப்பூணூல் பிரும்மசாரி. இரட்டைப் பூணூல் சம்சாரி (இரட்டைப் பூணூல் ஆனபிறகு மனைவி இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி—இரட்டைப் பூணூலுக்குக் கிரமமான தக்ஷிணை கேட்க உரிமை யுண்டு.)

(2) பூணூல் வயிற்றைக் குறுக்கிடுவதால், போஜனப்பிரிய பிராமணர்களின் தொந்திகளுக்குத் 'திருஷ்டி விழுந்தாலும்' பாதிக்காது. (வயிற்றை இரண்டாகப் பகுப்பதின் பயன் பூணூலுக்கு ஏற்படுகிறது.)

(3) கைக்கு எட்டா முதுகில் அழுக்கு, வியர்வை, பூச்சி இவைகளை நீக்குவதற்குப் பூணூல் உதவி புரியும்.

(4) பரிசாரகர் முதலியோர் பூணூலின் உதவியால் இலைகளைக் குறுக்காகக் கிழிக்கின்றனர்.

(5) சாவிகள் தொலையாம லிருக்கப் பூணூலில் கட்டி வைப்பார்கள்.

(6) பாம்பு, தேள் தீண்டினுல் இரத்த ஓட்டத்தைத் தடுக்கலாம். (to arrest the blood circulation)

(7) கை தொங்கவிட முடியாத நிலையில், (சீ) கட்டி புறப்பட்டால், பூணூலை உறியைப்போல் (sling) உபயோகிக்கலாம்.

(8) நாடகத்தில் அப்பிராமண நண்பர், பிராமண வேடம் தாங்கி நடிக்க நேர்ந்தால், பூணூலைக் கொடுத்துதவி சமய சஞ்சீவியாகலாம்.

(9) நடு பாதையில், துவிச்சக்கர வண்டியின் (Mudguard) 'மட்கார்டு' முதலிய பாகங்கள் ஆணிக ளிழந்து ஆடத் தலைப்பட்டால் பூணூல் தக்க உதவி புரியும்.

(10) கால்பந்தின் பிளாடரில் (Bladder) காற்றடித்து வாயைக் கட்ட பெரிதும் மாணவர்கள் பூணூலைக் கவலை யில்லாமல் பயன் படுத்துகின்றனர்.

(11) 'பெண்களுக்குக் கற்பின் தற்காப்பிற்கு ஒட்டியாணம் ஓர் தக்க உதவி' என்ருர் ஒரு பிரபல நம்நாட்டு நடிகர். அதுபோல் மானமழிந்து, உயிர் பாரமாகத் தோன்றும்போது பூணூல் தற்கொலை புரிய ஓர் அணிகலம் என்று ஒருவரும் சொல்லாமல் இருக்க வேண்டுமே......' என்று எழுதும் சமயம் கோவிந்த கனபாடிகள் பையனை அணுகிக் கவனித்தார் யஞோபவீத மஹான்மியத்தை. அத்தருணத்தில் கனபாடிகளை ஒரு புகைப்படம் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பினுல் முதற் பரிசு கண்டிப்பாகக் கிடைக்குமென்று எழுதவும் வேண்டுமா ?





மகளிரைப் பழிப்பது தகுதியா?

[திரு. நாரண - துரைக்கண்ணன்]

'மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்.'—பாரதியார்.

இப் பரந்த நிலவுலகத்தில் வாழும் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் ஈறாக உள்ள எல்லாவற்றிலும் ஆண், பெண் என இரு வகையான பகுப்பு இருந்து வருகிறது. இவ்விரு பிரிவும் உலக நடை பெறுதற்கு இன்றியமையாத தொன்றாகும். ஆணை யின்றிப் பெண் அமையாது; பெண்ணை யின்றி ஆண் அமையாது. ஆண்டவன் முன்னிலையில் ஆண் பெண் இரண்டும் சமமே. ஆண்பெண்ணிடையே சில அவயவ வேறுபாடன்றி வேறொரு வேற்றுமையு மில்லை. அவ் வவயவ வேறுபாடும் முக்கியமாக உலக உற்பத்திக்கும், ஆண் பெண் இருவரும் ஒருவரையொருவர் விரும்பி யன்பு பூண்டு ஒன்றுபட்டு வாழ்தற்கும் அத்தியாவசியமாக வேண்டி யிருக்கிறது. ஆணும் பெண்ணுங் கலந்து இன்புற்று வாழ வேண்டுமென்ற நோக்கத்தோடேயே இறைவன் இவ் வுலகத்தைப் படைத் திருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்த நம் முன்னோர்கள், ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் சமமாகப் பாவித்து அன்பு பூண்டு ஒருவர் மற்றொருவர்க்கு உதவியாக இருந்து உலக இன்பங்களை யனுபவித்து வந்தனர். அக் காலத்தில், மக்களில் ஆணாகப் பிறந்தவர்களெல்லாம் உயர்ந்தவர்களென்றும், புண்ணியஞ் செய்தவர்களென்றும், பெண்களெல்லாம் இழிதகைமையுடையவர்களென்றும், பாவப் பிறவிகளென்றும் கருதும் வழக்கமில்லை. பண்டைக் காலத்துள்ள மக்களில் தன் னல மிக்க ஒரு சாரார் தோன்றிப் பெண்கள் ஆண்மக்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யும் அடிமைகளென்றும், காமக் கழிவிடமென்றும், பிள்ளை பெறும் இயந்திரம் என்றும் எண்ணத் தலைப்பட்டு, அவர்களுக்குச் சமத்துவந் தருவதை யொழித்து, உரிமைகளை யெல்லாம் பறிமுதல் செய்து, அவர்களைத் தங்களுக்கு அடங்கி நடக்கும்படி செய்தற்குரிய கொடிய கட்டுத் திட்டங்களை யெல்லாம் விதித்து அடிமைகளாக நடத்தத் துவங்கிய பின்னரே, மக்களிடையே பெண்களை இழிவாக எண்ணும் எண்ணம் வேரூன்றலாயிற்று. மேலும், அச் சுய நல மிக்க ஆடவர்கள், ஆண் மக்கள் வன்மையான தேகத்தைப் பெற்றிருத்தலால், அவர்கள் வல்லியற்கைக் கேற்றவாறு, வெளியே சென்று நிலத்தைப் பண்படுத்தி உழவு வேலை செய்தலும், அதனாலேற்படும்

விளைபொருள்களை விற்றலும், போர் செய்தலும் முதலானவைகளைச் செய்தும், பெண் மக்கள் மெல்லிய உடம்பை யுடையவர்களா யிருந்தமையால், அம்மெல் லியற்கைக் கியைய வீட்டிலிருந்து, கல்வி கற்றல், நூல் நூற்றல், துணி நெய்தல், சமையல் வேலை செய்தல் முதலானவைகளைச் செய்தும், வந்ததைக் கண்டு, அவர்கள் உடற் கூற்றுக் கேற்றவாறே ஆண்களுக்குத் திடசித்தமும், பெண்களுக்குச் சபல சித்தமும் இருக்கிறதென்று அறிவிலும் பேதத்தைக் கற்பித்து ஆண்கள் ஒன்றிலேயே உறைத்து நிற்பார்களென்றும், பெண்கள் மனம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறக் கூடியதென்றும், ஆயிர மன முடையவர்க ளென்றும், ஆதலால் அவர்களிடத்துக் கற்பு கிடையா தென்றும் போலிக் கொள்கைகளைப் பரப்பலாயினர்.

இச் சுயநலப் புலிகளது போலிக் கொள்கையை அடிப் படையாகக் கொண்டே பல நூல்கள் செய்யப்பட்டன. அந் நூல்களை இயற்றியவர்க ளெல்லாம் பெரும்பாலும் துறவிகளே யாகும். எடுத்துக் காட்டாகச் சில செய்யுள்களைக் காண்போம்.

'பெண்ணெனப் படுவ கேண்மோ!
பீடில; பிறப்பு நோக்கா;
உள் நிறை யுடைய அல்ல;
ஓராயிர மனத்த வாகும்
எண்ணிப் பத்து அங்கை யிட்டால்
இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க் குன்று எரியுற்றுற்போல்
மெலிந்து பின்னிற்கும் அன்றே.'

'அன்புநூலாக இன்சொல் அலர்தொடுத்து அமைந்த காதல்
இன்பஞ்செய் காமச்சாந்திற் கைபுனைந்து ஏற்றமாலை
நண்பகற் சூட்டிவிள்ளாது ஒழுகினும் நங்கைமார்க்குப்
பின்செலும் பிறர்கண் உள்ளம் பிணையனூர்க் கடியதன்றே.'

'ஏந்துஎழில் மிக்கான் இளையான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை இன்சொல்லான் கேள்எனினும் மாதர்க்கு
அயலார்மேல் ஆகும் மனம்'

என்று முறையே திருத்தக்க தேவரும், குமாரகுருபர சுவாமிகளும் பாடி யிருக்கின்றனர். ஆனல் தமிழ் மறையை அருளிய திருவள்ளுவ நாயனர் போன்ற இயற்பாவலர்கள் பெண்களைத் தெய்வமாகப் போற்றுகிறார்களே யன்றி இவ்வாறு இழித்து ஒரு இடத்திலேனுங் கூறவில்லை. ஆனல் இப்போலிக் கொள்கையாகிய விஷம் தலைக்கேறப் பெற்ற ஒரு சிலர், திருவள்ளுவர் போன்றவர்கள் பரத்தைகளைக் கூறும் பாக்களைப் பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் சம்பந்தப் படுத்திப் பொருள் கூறிப் பல மக்களைக் கெடுக்கின்றனர். அந்தோ!

அத் தீவினையை என்னென்பது!

சமீபத்தில் ஒரு நாள் மாலை நான் கடற்கரையில் ஒரு தமிழ்ப் புலவருடன் உரையாடிக்கொண் டிருந்தபோது, அவர் பின்வரும் வில்லி பாரதச் செய்யுளைக் கூறி அதற்குப் பொருள் கூறுமாறு கேட்டார்:

'ஐம்புலன் களும்போல் ஐவரும் பதிகளாகவும் இன்னம்
வேறொருவன், எம்பெருங் கொழுந னுவதற்கு உருகும்?
இறைவனே எனதுபேரிதயம், அம்புவிதனிற் பெண் பிறந்தவர்
எவர்க்கும் ஆடவ ரிலாமையின் அல்லால், நம்புவதற்கு
உளதோ என்றனள் வசிட்டன் நல்லற மனைவியே யனையாள்.'

இப்பாடல் மகாபாரதம் ஆரணிய பருவம் பழம் பொருந்து சருக்கத்தில் இருக்கிறது. பாண்டவர்கள் வனத்தில் இருக்கையில் ஒரு நாள் துரோபதையின் வேண்டுகோளின்படி விஜயன், அமித்திரன் என்னும் முனிவன் உண்ணும் நெல்லிக் கனியை மரத்தினின்றும் பறித்து அவளுக்குக் கொடுத்தான். பின்னர் அக்கனி மேற்படி முனிவனுக்கு உணவாக அமைந்தது என்று தெரிந்த அர்ச்சுனன், விஷயத்தைத் தரும புத்திரனுக்குச் சொல்லவும், அவர் முனிவன் சாபத்துக்கு ஆளாக நேருமே என அஞ்சிக் கவலையுற் றிருக்குங்கால், நகுலன் யோசனைப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவானை வரவழைத்து, அதற்குப் பரிகாரந் தேடும்படிப் பாண்டவர்கள் வேண்டினர். அப்போது ஸ்ரீ கிருஷ்ணன், பாண்டவர் ஐவரும், துரோபதையும் தங்கள் உள்ளத்தில் உள்ளதை உண்மையாக உரைத்தால், அப்பழம் மரத்தில் சென்று பொருந்தும் என்று சொன்னான். அவ்விதமே பாண்டவர்கள் தங்கள் மனத்தி னியல்பைக் கூறினர். பின்னர் துரோபதை தன் மன நிலையை விரித்துரைத்தாள். அச்சமயம் அவள் உரைத்த பாடலே மேற் குறிக்கப்பட்ட செய்யுளாகும்.

இப்பாடலுக்கு யான், 'வசிட்ட முனிவனது தரும பத்தினி யாகிய அருந்ததியை ஒத்தவளான துரோபதை, 'இறைவனே! மானிடர்களுக்கு மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்புலன் இருப்பது போல, எனக்குப் பாண்டவர் ஐவரும் தலைவர்களாக இருக்கவும், மற்றும் ஒருவன் எனக்குக் கணவனுக வேண்டுமென்று என் உள்ளம் உருகுமோ? ஒருக்காலும் உருகாது. ஆனால், இப்பூமியில் பெண்ணுய்ப் பிறந்த எத்தகைய கற்பரசியையும், அவளுடைய அழகு கருதி விரும்பாத ஆண்மக்கள் இல்லையாதலால் சந்தேகத்துக்கு இடந் தருகிறது' என்று கூறினுள்' என்று பொருள் கூறி, பேரழகுடைய பெண்ணெருத்தி யிருப்பாளாயின், அவள் பிற ஆடவரை மனத்தாலும் எண்ணுத கற்பரசியாயினும், அவளைப் பார்க்கும் ஆண்மக்கள் அவளை எவ்வாருயினும் அடைய வேண்டுமென்று விரும்புகின்றனர் என்ற உலக நடையையும் விவரித்து உரைத்தேன்.

இதைக் கேட்ட அப்புலவர் நகைத்து, 'இப் பாட்டிற்கு நீர் உரைத்தது சரியான பொருளன்று; நீர் இளைஞராதலால் பெண்டிரியல்பை யுணராது இப்பொருள் கொண்டீர்! நான் சொல்லுகிறேன் கேளும்; வசிட்டன் பன்னியாகிய அருந்ததியை ஒத்த கற்புடைய துரோபதை, 'இறைவனே! என் மனம் ஐம்புலன்களைப்போல ஐந்து கணவன்மா ரிருந்தும் இன்னும் வேறொருவன் என் கணவனாவதற்கு உருகுகின்றது. ஏனெனில் இவ்வுலகில் பிறந்த பெண்கள் எவரையும் திருப்தி செய்யக்கூடிய ஆடவர் இல்லை யாதலால், அவர்களை நம்புவதற்கில்லை' என்று கூறினள்' என்று உரைத்தார். மேலும் அவர், 'பெண்கள் சபல சித்த முடையவர்கள், இத் துரோபதையும் பாண்டவர்களை யல்லாது கன்னனையும் விரும்பி யிருக்கிறாள்; அவர்கள் சமூக கட்டுத் திட்டங்களுக்கு அடங்கி நம் ஆளுகையில் இருக்கிறார்கள்; இல்லையேல் அவர்கள் நம்மை எய்த்துவிடுவார்கள்' என்று வியாக்கியானங் கூறினர். இதைக்கேட்டுப் பொறாத நான், 'ஆசிரியர் வில்லிப்புத்தூரார் கருத்து தாங்கள் கூறும் பொருளுக்கு ஏற்புடைத்தாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவர் இயற்றியுள்ள அப்பாடலின் போக்கைப் பார்த்தாலே தங்கள் கொள்கைகளுக்கு முரணாயிருக்கிறது. 'ஐம்புலன்களும்போல் ஐவரும் பதிகளாகவும்' என்ற சொல் லமைப்பும், 'இன்னம் வேறொருவன் எம் பெருங் கொழுநன் ஆவதற்கு உருகும்? எனது பேரிதயம்' என்ற சொல்லமைப்பும் துரோபதையின் தூய மனத்தைக் காட்டும் பளிங்காக அமைந்திருக்கிறது. 'பதிகளாகவும் என்ற சொற்பிரயோகத்தை ஆழ்ந்து நோக்குங்கள். தாங்கள் சொல்லும் வண்ணம் துரோபதையின் மனம் வேறொருவனைக் கணவனாக விரும்புமாயின் அது 'பேரிதய'மாகாது? அவ்வாறு கண்டவர் மீதெல்லாம் மனத்தைச் செலுத்துபவளாயின், துரோபதையை ஆசிரியர், 'வசிட்டன் நல்லற மனைவியே யனையாள்' என்று கற்பரசி யெனச் சிறப்பித்துக் கூறுவரோ? ஆதலால் தாங்கள் துரோபதையை இழித்துக் கூறிப் பெண்ணுலகை மாசுபடுத்துவது பொருந்தாது?' என்று வாதாடினேன்.

எனினும் அப்பெரியார் அதை யொப்புக் கொள்ளாது அவர் கொள்கைக்கு அரண் செய்வனவற்றை யெல்லாம் எடுத்து வாயோயாது சோனாமாரிபோல் பொழிந்தார். இதனால் என் மனமும் மருண்டது. அப்பாட்டுக்கு அவர் கூறும் பொருள் இருக்குமோ என்றும் ஐயுறலானேன். எனவே, நமது தீந் 'தமிழரசு' வாயிலாக வெளியிட்டால், உண்மை யுணர்ந்து தெளியலா மென்று இதில் இது பற்றி வரையலானேன். நுண்மாண் நுழைபுலமுடைய பெரியார்கள் இவை யனைத்தும் சீர்தூக்கி நற்பொருள் இதுவென நாடிப் புகழெய்துமாறு எதிர்விழைகிறேன்.

கோபாலனின் தீர்மானம்
அல்லது வீட்டுக் கஷ்டம்

[இலைமறை]

கோபாலன் வெகு நாளாய் வேலை யில்லாது தவித்துக் கொண் டிருந்தான். அதிர்ஷ்ட வசமாய் ஒரு கம்பெனியில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. காலை 8 மணி முதல் மாலை $5\frac{1}{2}$ மணிவரை கம்பெனி காரி யாலயத்தில், வேலை இருந்தாலும் சரி; இல்லாவிடி லும் சரி; சிறையி லிருந்தே தீரவேண்டும். ஆறு மாத காலமாயிற்று. வேலையும் ஊர்ஜிதமாயிற்று. கோபாலன் தன் மனை வியை அடுத்தவாரமே அழைத்துவந்து குடும்பம் நடத்த உறுதி கொண் டான்; வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு, வீடு தேடலானான்.

ஞாயிற்றுக்கிழமை. 'டு லெட்' (To Let) என்று அட்டை தொங்கிய வீடுகள் எல்லாம் தங்கு, தடக்கம் இன்றி, கஸ்டம்ஸ் அதிகாரிகளைப் போல, நுழைந்தான்.



அவன் முதல் வீட்டில் ஒரு ஸ்தி ரீயைச் சந்தித்தான். அவள், அவ் வீட்டை முழுதும் வாடகைக் கெடுத் திருப்பவனின் தாயார். 'வாங்கோ. இரண்டு அறைக ளிருக்கின்றன. இரண்டாங்கட்டு. பெரிய முற்ற மிருக்கிறது. காற்று ஜாஸ்தி யில்லாவிடினும் வெளிச்சம் ஜாஸ்தி. தனி பைப். கிணறும் முற் றத்திலேயே இருக்கிறது' என்று முடித்து விட்டு, 'உங்களுக்கு எவ் வளவு குழந்தைகள்? நீங்கள் எவ்வளவு பேர்கள்' என்றாள் ஏதோ ஒன்றை மறந்து, மறுபடி யும் ஞாபகம் கொண்டவள் போல்.

கோபாலனுக்குத் திடுக்கிட்டது எனினும் ஒன்றும் வெளிக் காட்டாது, இரண்டே பேர்' என்று சொல்லிவிட்டு போர்ஷனைப்

பார்வை யிட்டான். மனத்திற்குப் பிடிக்கவில்லை. வாடகையும் 16 ரூ. மிக ஜாஸ்தி. ஒன்றுஞ் சொல்லாது, வேறு 'டு லெட்' வீட்டிற்குப் போனான்.

'உங்களுக்கு எவ்வளவு குழந்தைகள்? நீங்கள் எவ்வளவு பேர்கள்' என்ற வார்த்தைகள் அவன் மனத்தில் ஒலித்துக்கொண்டே யிருந்தன.

வேறொரு வீடு. திண்ணை இரும்புக் கம்பிகளால் அடைக்கப்பட்டிருந்தது. ஒரு மூலையில் வீட்டிற்கு விலக்கமான ஸ்திரீகள் ஒதுங்கி யிருந்து வம்பளந்துகொண் டிருந்தனர். திண்ணையில் வெற்றிலை போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார் ஓர் வயதானவர்.



கோபாலன் திண்ணை யேறினது தான் தாமதம். 'வாருங்கோ, ஸ்வாமி' என்று சொல்லி அவனை உட்கார வைத்து அவன் ஊர், பேர், வம்சாவளி முதலியவற்றை வெகு விவரமாக விசாரித்தார்.

சுமார் 40 நிமிஷமாய் விட்டது. பெரியவர் பேச்சை நிறுத்துவதாகத் தென்படவில்லை. வெயிலும் ஏறிவிட்டது.

'போர்ஷனைப் பார்க்கலாமா? நாழிகை யாகிவிட்டது' என்றான் கோபாலன்.

'ஸ்வாமி, க்ஷமித்துக் கொள்ள வேண்டும். வயதானவர்களுக்குச் சிறுவர்களைக் கண்டால் கொண்டாட்டம்' என்று மறுபடியும் தொடங்கிவிட்டார்.

கோபாலன் ஜாடையாக எழுந்தான்; குறிப்பை அறிந்துகொண்ட பெரியவர், புகையிலையை வாயில் அடைத்துக்கொண்ட வண்ணமே, 'சின்னச் சுப்பா' என்று உரக்கக் கூவினார். 'இந்த வீட்டில் இரண்டு சுப்பன்கள் இருக்கிறார்கள் போல் தெரிகிறது' என்று கோபாலன் தனக்கு நினைத்துக்கொண்டான்.

சுமார் ஏழு வயதுள்ள பையன் ஒருவன், 'ஏன் தாத்தா?' என்று சொல்லிக்கொண்டே ஓடி வந்தான்.

'அடே, நாலாங் கட்டு போர்ஷனையும், மூன்றாங் கட்டு போர்ஷனையும் இந்த மாமாவுக்குக் காட்டடா' என்றார் பெரியவர்.

கோபாலனும் பையனும் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

கோபாலனுக்குச் சற்றும் பிடிக்கவே யில்லை. சுமார் 15 குழந்தைகளுக்குக் குறையாமல் பார்த்தான். 'சரிதான், இரண்டு சுப்பன்; இரண்டு லக்ஷ்மி, இவர்களி ருப்பது சகஜந் தான்' என்று திடப்படுத்திக் கொண்டான். ஒரு குழாய்க் கருகில் இரண்டு ஸ்திரீகள் உரக்கச் சண்டை யிட்டுக்கொண் டிருந்தனர். அச் சண்டையை 5, 6 குழந்தைகள் வேடிக்கைப் பார்த்துக்கொண் டிருந்தன. சண்டையின் காரணத்தைக் கோபாலன் கிரகித்துக்கொண்டான்.



கோபாலன் முன்னமேயே ஊகித்தபடி அவ்வீட்டில் இரண்டு சுப்பன்கள் இருந்தார்கள். ஆகையால் கூப்பிடும்போது கஷ்டமாயிருந்தது. இந்தச் சுப்பனைக் கூப்பிட்டால் மற்றொருவன் வந்துவிடுவான். இருவருக்கும் சுமார் ஒரே வயது. ஆனால் ஒரு சுப்பன் சற்று சிவப்பு நிறம்; மற்றொருவன் மாநிறம். முன்னவனின் பெற்றோர்கள் தம் பிள்ளையைச் சிவப்புச் சுப்பன் என்று கூப்பிடச் சம்மதித்தார்கள். கறுப்புச் சுப்பன் தாயாருக்குக் கோபம் பிறந்தது. 'கட்டாலே போக, கழிச்சல்லே போக, தாலி யறுக்க' என்ற புகழுரைகள் வீசப்பட்டன. பெரும் அமளியாய் விட்டது. முடிவாக சிவப்புச் சுப்பனைச் சின்னச் சுப்பன் என்றும், கறுப்புச் சுப்பனை, சுப்பன் என்றும் கூப்பிடுவதாக எல்லாரும் சேர்ந்து மத்தியஸ்தம் செய்துவிட்டனர். இது நடந்து ஒரு மாத மாகிவிட்டது. எனினும் இதைக் குறித்த சண்டை தினம் ஒன்றில்லாது போகாது. கோபாலனும் இதைப் பார்க்கக் கொடுத்து வைத்திருந்தான்.

மிக நெருக்கடியான அவ்வீடு கோபாலனுக்கும் பிடிக்கவில்லை. வெளிவரும்போது பெரியவர், 'ஏன் ஸ்வாமி, இடம் பிடித்ததா? உங்களை ஒன்று கேட்க மறந்த விட்டேன். உங்களுக்கு எவ்வளவு

குழந்தைகள். நீங்கள் எவ்வளவு பேர்?' என்றார். எனக்கு இடம் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டு வெளியேறினான் கோபாலன்.

வேறொரு வீடு. உள் நுழைந்தான் கோபாலன். ஒரு ஸ்திரீ ஏதோ திட்டிக்கொண்டிருந்தாள். 'பாழும் வீடு. 'டு லெட்' போட்டு விட்டால் போதும். தெருவில் போகும் எல்லாரும் இலவச கண்காக்ஷி சாலையைப் பார்த்துப் போவது போல், நுழைய வேண்டியதுதான்,' என்று ஏதோ சொல்லிக்கொண்டிருந்தவள் கோபாலனைப் பார்த்தவுடன் தன் வாய்க்குப் பிரேக் போட்டுக்கொண்டாள்; அன்பே உருவெடுத்தால் போல் அவனை உபசரித்து இடத்தைக் காட்டினாள். இடம் பிடித்திருந்தது. வாடகையும் ஜாஸ்தியில்லை. இந்த வீட்டிற்கு ஏன் ஒருவரும் வரவில்லை என்று ஒரு சந்தேகம் உண்டானது.

'அம்மா, எத்தனை மாதமாக இது காலியாயிருக்கிறது. முன்னால் இங்கு யாரிருந்தார்கள்' என்றான் கோபாலன்.

'ஒரு ஒண்ணறை மாதமாக காலி, அப்பா. இருந்துட்டுப் போவா, எங்க போனாளோ? யாரோ? எனக்குத் தெரியாது.' என்றாள் மிக இனிமையான குரலில்.

'எனக்குப் பிடித்திருக்கிறது. என் ஸம்ஸாரத்தை வந்து பார்க்கச் சொல்லுகிறேன்.' என்று சொல்லி விட்டு வெளிப் போந்தான் கோபாலன்.

கோபாலன் வெளியே போய் இரண்டு வீடு தாண்டவில்லை. ஒரு வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் அவனைக் கூப்பிட்டான்.



'ஐயா, அந்த வீட்டுக்குப் போகாதீங்க. பிசாசு பிடித்த வீடு அது. இரண்டு வருஷத்திற்கு முன்னே, ஒரு ஸ்திரீ தன் மேல் மண்ணெய் கொட்டிக் கொண்டு தீ வைத்துக் கொண்டு இறந்து விட்டாள். அது முதல் அந்த வீடு காலிதான்' என்றான்.

வீட்டுக்காரியின் கோபத்திற்கும், அவள் பின்பு காட்டிய போன்பிற்குமுள்ள தத்துவம் கோபாலனுக்குப் புலப்பட்டது.

அநேக 'டு லெட்கள்' பரிசோதிக்கப்பட்டன. பயனில்லை. அந்த ஞாயிற்றுக்கிழமை பயனற்று விட்டது.

* * *

அடுத்த ஞாயிறு. வீட்டு வேட்டைக்குப் புறப்பட்டான் கோபாலன். அநேக வீடுகளைப் பார்த்துவிட்டு வெறுப்படைந்து 'இதுதான் கடைசி வீடு' என்று ஒரு வீட்டிற்குள் நுழைந்தான்.

தெரு சுத்தமா யிருந்தது. வீட்டின் வெளித் தோற்றமும் கோபாலனுக்குப் பிடித்திருந்தது. வீட்டில் ஒரே யுவதி தவிர வேறொருவருமில்லை. வீட்டுக்காரனின் இளையாள். அவள், மிக அழகா யிருந்தாள். கோபாலன் கதவைத் தட்டி நுழைந்ததும் அவன் அவள் அழகைக் கண்டு ஸ்தம்பித்து நின்று விட்டான். எனினும் திடப்படுத்திக்கொண்டு தான் வந்த காரியத்தைச் சொன்னான். மாலை $5\frac{1}{2}$-மணிக்கு மேல், தன் புருஷன் வந்த பிறகு வருமாறு சொல்லி அனுப்பி விட்டாள்.

கோபாலன், தன் சபதப்படி, வேறொரு வீட்டையும் பார்க்கவில்லை. நேராகத் தானிருந்த ஹோட்டலுக்குச் சென்று $5\frac{1}{2}$-மணிவரை காத்திருந்து, திரும்பி வந்து வீட்டுக்காரனைக் கண்டு, வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டான்.

அந்த வாரம், வெள்ளிக்கிழமை காலை, கோபாலன் மனைவியும் வந்துவிட்டாள். கோபாலனின் இல்லறம் இனிமையாகத் தொடங்கியது. வீட்டுக்காரனின் இளையாள் ரமணியிடம் வைத்த பிரமையெல்லாம் கோபாலன் அறவே மறந்துவிட்டான். எனினும், ரமணி மட்டும் மறக்க முடியவில்லை. 'இனம் இனத்தோடு சேரும் அல்லவா?' இளமை இளமையைக் கவர்ந்தது. ரமணிக்குக் கோபாலன்மீது பிரமை வீழ்ந்து, வாதைப்படலானாள். கோபாலனது புது மயக்கத்திலும், அவன் நற்குணத்திலும் ரமணியின் ஸாகஸங்கள் செல்லவில்லை. வீட்டுக்காரன் உலக அனுபவஸ்தன். தன் இளையாளின் எங்கலை உணர்ந்தான்.

கோபாலன் இல்லறம் தொடங்கிச் சரியாக 15-ஆம் நாள் வெள்ளிக்கிழமை 24 மணி நேரத்திற்குள் வீட்டைக் காலி செய்யுமாறு, கோபாலனுக்கு ரிஜிஸ்டர்ட் நோட்டீஸ் வந்தது.

பார்த்தான் கோபாலன். வீடு தேடும் கஷ்டம் அவனுக்கு நன்ருகத் தெரியும். இனிமேல் சென்னையில் அடிமை வேலை செய்து கொண்டு, பிறர் வீட்டில் குடியிருந்து வாழ்வதைவிடப் பிச்சை யெடுப்பதே நலம் என உறுதிகொண்டான்; அன்றிரவு வண்டியிலேயே, தன் கிராமம் போய்ச் சேர்ந்தான்.

'போதும் அடிமை வேலைக்குக் கஷ்டம்; போதும் வீட்டுக் கஷ்டம்.' 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; பழுதுண்டு மற்ருேர் பணிக்கு' எனத் தன் னில்லாளிடம் பேசிக்கொண்டு தன் நில வேலைகளைக் கவனித்தவண்ணம் காலம் கழிக்கலானுன் கோபாலன்.



தேவு முதலியார்:—நான் பார்ப்பனக் கைம்பெண்ணை எனது காதலியாய்க் கொண்டேன். அவளைத் தமிழ்ப் பெண்ணைப்போல் புடவையைக் கீழ்ப்பாசில்லாமல் கட்டச்சொன்னுல் 'மாட்டேன்' என்கிருள். என்ன செய்கிறது? நான் பார்ப்பனரைப் போல் மீசையை எடுத்து விட்டேன்.

கல்கியின் நினைவுகள்

[உண்மை உணர்ந்தோன்]

III

அழகிற் சிறந்த அதிலும் நீண்ட மயிரும் கறுத்த விழியும் சிறுத்த இடையும் படர்ந்த மார்பும் சிவந்த மேனியும் அன்ன நடையும் குயிலின் ஒலியும் மயிலின் சாயலும் வர்ண உடையும் கண்ணைப் பிடுங்கும் வெள்ளையணியும் உடைய மங்கைப் பருவ நங்கையுமான பொதுமகள் கிருஷ்ணவேணியின் சுகத்தை அனுபவித்து அவள் செலவுக்குத் தக்கவாறு பணம் கொடுக்கும் பிரபு பரங்கிமலை ரோட்டு பிரபல நகை வியாபாரி ரகு என்னும் தக்கர் என அறிந்து அவரைக்கொண்டு வந்து கிருஷ்ணவேணியிடம் கருணையாளர் ஒருவர் சேர்த்துவிட்டார். பின்னர் கிருஷ்ணவேணியின் நிலையைக் கேட்பானேன்? பெரிய பெரிய இரத்தின வியாபாரிகளெல்லாம் கிருஷ்ணவேணியின் வீட்டு வாசலில் மாமாவாக உலவியிருந்தார்கள். ரகுவிடம் கேட்டபோதெல்லாம் பணம் கிடைக்காததால் அவர் வைரப் பொட்டணங்களைக் கொண்டு வந்து கொடுக்கலானார். அவற்றைப் பதினாயிரத்திற்கு விற்று ஆயிரம் கிருஷ்ணவேணிக்குக் கொடுத்து மிகுதியை மாமாமார்கள் பங்கு போட்டுக் கொள்ளுவார்கள். கிருஷ்ணவேணிக்கோ வைர நகைகள் போதுமான தாகிவிட்டன. பிறகுத் தட்டானைக் கூப்பிட்டு 'இதுவரையில் யாரும் போட்டிராத மாதிரி நகைகள் எதாவது செய்து தரமுடியுமா?' என்று கேட்டாள். அதற்கு ஆச்சாரி 'அருமையான மூன்று நகைகள் செய்து வருகிறேன்' என்று சொல்லி வைரங்களை வாங்கிக் கொண்டுபோய் மூன்று நகைகள் செய்துகொண்டு வந்தான். அதில் இரண்டு கொங்கைகளுக்கும் கவசங்களும் ஒன்று அறைமூடி பில்லையுமாம். இந்நகைகளை அணிந்துகொண்டு டக்கா மஸ்லீன் சல்லாவை மேலே சுற்றிக்கொண்டு வைரத்தால் செய்த ஜோட்டை மாட்டிக் கொண்டு பீடின் வண்டியில் எறிப் பீச்சுக்குக் கிருஷ்ணவேணி வருவதைப் பார்க்க ஆயிரக்கணக்கான வாலிபர்களும் நாடி தளர்ந்த அறுபது வயதுக்கு மேற்பட்ட சிறுபாலர்களும் கூடிக் குழுமி இருப்பார்கள். வீட்டில் வில்வட்டின் விரிப்பின் மேல் நடக்கும் பிரபாவத்தைப் பார்க்க வரும் பிரபுக்களுக்கோ கிருஷ்ணவேணி கண்ணாடியின்

மூலம் தரிசனம் கொடுப்பள். அவள் வீட்டில் மாமா வேலை பார்த்த பலர் பெரிய இரத்தின வியாபாரியாயினர். இவ்வாறு டம்ப வாழ்க்கையை நடத்திய கிருஷ்ணவேணி தன் கண்ணில் தோன்றும் எந்தப் பிரபுவையும் தனக்குத் தூசு மாத்திரமாக நினைத்திருந்தாள்.

ஒரு நாள் ரகுவானவர் ரயிலேறி தூரதேசம் செல்லும்போது வங்கப்பட்டணத்தில் ரயில் கவிழ்ந்து மாண்டார். அவர் மடியவே கிருஷ்ணவேணிக்குச் செல்வம் குறையலாயிற்று. கடைசியில் தனக்குப் புடவை தோய்த்துவந்த ஒருவனை நேசித்து அவனிடம் வாழ்ந்து ஒன்றரை ரூபாயில் சேலைகட்டி இரண்டு நாளைக்கொருதரம் கூழ் குடித்து வாழத் தலைப்பட்டாள். இவளிடம் வந்துகொண்டிருந்த மாமாமார்களும் இவளைப் பார்த்து 'இவள் கர்வத்தைப் பார்த்தீர்களா இவள் முன்பு வைர அறைமூடிக் கட்டிக்கொண்டு ஆடையின்றி உலாத்தினளல்லவா? அதனல்தான் இன்று குடிக்கக் கஞ்சி இல்லாமல் ஒரு குடிகாரனைக் கட்டிக்கொண்டு அழுகுகிருள்' என ஏசலானுர்கள். தாசிகள் எல்லாம் சேர்ந்து இவள் பேச்சைப் பேச முற்பட்டார்கள். அது சமயம் தாசிகளெல்லாம் கீழ்க்கண்ட தீர்மானத்தையும் செய்தார்கள்:

'இனி எவ்வளவு செல்வத்தை மைனர்கள் நமக்குக் கொடுத்தாலும் நாம் காலில் வைரத்தை அணியலாகாது. அறைமூடி பில்லையும் கட்டலாகாது. அன்றியும் பணம் சம்பாதித்துக் கொண்ட பின் ஒரு புருடனை ரிஜிஸ்டர் விவாகம் செய்து கொள்ள வேண்டும். நாம் மணந்து கொள்ளும் புருடனுக்கு மனைவி இருந்தாலும் பாதகமில்லை' எனப் பேசி முடித்தார்கள். இத் தீர்மானத்தை அனுசரித்தே பேர் போன தாசிமார்களெல்லாம் இப்போது ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டு வருகின்றனர்.

மைனர் பிள்ளைகளெல்லாம் சேர்ந்து ஒரு தீர்மானம் செய்தார்கள் அது யாதெனில் இனி மைனர்கள் ஒரே தாசிக்குப் பணத்தைக் கொடுக்கக் கூடாது. வேண்டுமானல் மூன்று நாளைக்கு ஒரு தாசியாக வைத்துக்கொள்ளலாம். நம்முடைய மூதாதைகள் பாடுபட்டுத் தேடிய பணம் பல தாசிகளுக்கும் பயன்பட வேண்டும் என்பதாம். சொந்த மனைவி மக்கள் மாதா பிதா அக்காள் தம்பி இவர்கள் எக்கேடு கெட்டாலும் பாதகமில்லை. அவர்கள் கூலி வேலை செய்து பிழைக்கட்டும்; சமையல் செய்து வாழட்டும்; வீடு கட்டிப் பிழைக்கட்டும்; அல்லது இலை தைத்து பிழைக்கட்டும்; அப்படியும் இல்லாவிட்டால் இரந்து உண்டு வாழட்டுமே என்று முடிவுகட்டினர்.

* * *

படித்த இளைப்பினலும் பரோபகார உழைப்பினலும் பகலிலேயே மெத்தையில் படுத்து நித்திரை செய்த கல்கி 'ஆ! தெய்வமே! தெய்

வமே' என்று அலறிக்கொண்டு எழுந்தார். அப்போது மாலைக் காபியை எடுத்துக்கொண்டு அங்கு வந்த அவரது மனைவி, 'என்ன நாதா! இப்படி அலறுகின்றீர்களே?' என்று வினவினள்.

பொதுஜன ஊழியராகிய கல்கி, தாம் தூங்கியதையும், அப்போது தாம்கண்ட மேலேயுள்ள விவரமான கனவையும் தமது மனைவியிடம் கூறினர். 'என்ன, போங்கள், எப்போது பார்த்தாலும் இந்த ஊர் விவகாரங்களைப்பற்றி நினைத்துக்கொண்டே யிருப்பதால்தான் பகலி லேயே இப்படிப்பட்ட கனவுகளைக் காண்கிறீர்கள். எல்லாம் மனம் நிம்மதியாக யிருந்தால்தானே. அதுபோகட்டும் இந்தக் காபியைக் குடியுங்கள்'! என்று தன்னுடைய மெல்லிய கையாலேயே அவரது வாயில் காபியை ஊற்றினள்.

பூனைக்கும் ஒரு காலம் வரும்

இந்திய மக்களது வருவாயைக்கொண்டு தென்னடு முழுமையும் போக்கு வரவு சாதனங்களைச் செய்துள்ள தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள்—ஏழைமக்கள் படும் கஷ்டத்தைத் தெரிவித்து ரயில்வே கட்டணத்தைக் குறைக்குமாறு கேட்டதற்குச் செவி சாய்க்காத ரயில்வே கம்பெனியார் இப்போது சில இடங்களுக்கு மாத்திரம் தாங்களாகவே கட்டணத்தைக் குறைத்திருக்கின்றனர். அதாவது மோட்டார் பஸ் ஓடும் மார்க்கங்களுக்கு மாத்திரம் கட்டணத்தைக் குறைத்து இருக்கிறர்கள். பஸ்காரர்கள் நஷ்ட மடைந்து பஸ்களை நிறுத்தி விட்டால் பிறகு ரயில்வே கட்டணங்களை உயர்த்தி விடுவார் கள்போல் தெரிகின்றது. ஆனல், இனி பஸ்காரர்கள் சென்னையி லிருந்து மதுரை வரை பஸ் விட்டால் எல்லா ஸ்டேஷன்களுக்கும் ரயில் கட்டணத்தையும் குறைத்து விடுவார்கள். பஸ் போட்டி நீங்கிய பின் அதற்குள் ஆகாய விமானப் பிரயாணம் வர அப்போது ஆகாய விமானமும் ரயிலும் போட்டி போடலாம். அப்படியானல் விமானத் திலேயே அனைவரும் செல்ல வேண்டும். அப்பொழுது ரயில்வே கம்பெனியார் நம்மைக் கெஞ்சிக் கேட்பார்கள். அதுவரையில் நாம் புக்கிங் கிளார்க்கிடம் நின்று கொண்டு 'சார், சார் ஒரு டிக்கட்சார்' என்று வேண்டி சலாம் போட வேண்டுமே? என்ன செய்வது? ஆனைக் கொருகாலம் பூனைக் கொருகாலம். —மே. மா

"மீனுட்சி" பிரஸ் 31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

எழுதிய

அனுபவ வைத்திய நூல்

இரண்டு பாகங்களும் உங்களிடம் இருக்கின்றனவா? இல்லையேல் உடனே எழுதி வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள். இப் புத்தகங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல்கள் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூல்களின் உதவியைக் கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூல்களில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலின் இரண்டு பாகங்களையும் வைத்துக் கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

முதல் பாகம் விலை ரூபா		1—0—0
இரண்டாம் பாகம்	,,	1—0—0
இரண்டு பாகங்களும் சேர்ந்து	,,	1–12—0

தபால் சார்ஜ் வேறு

காரியஸ்தர் :—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர் களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள் களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சிறந்த வரலாறு உயர்ந்த கருத்துகள்

லெனின்

இன்று சோவியத் ரஷ்யா உலகத்திலுள்ள நாடுகளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றதென்றால், அதற்குக் காரணமாக இருந்தவர் லெனின் என்ற பெரியாரே யாவர். பெரியார் லெனின் சுயநலம் சிறிதும் கருதாது ஏழை ரஷ்யர்களைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுவிக்கவும், பணத்திமிர் படைத்தவர்கள் செய்துவந்த அட்டூழியங்களை ஒழிக்கவும் முயன்று, அதனால் தாம் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் தாம் நினைத்ததைச் செய்து முடித்த வரலாறு படிப்போர்க்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உதவுமென்பதில் ஐயமில்லை. ஏழை மக்களின் துயரம் துடைப்பதற்கெனவே தோன்றி, அதன் பொருட்டே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த வெற்றி வீரர் லெனினது வாழ்க்கைச் சரித்திரத்தை அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்தும் இந்தியர் ஒவ்வொருவரும் கற்றறிய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் இந் நூலில் பரக்கக் காணலாம். அவரது திருவுருவப் படமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. கிளேஸ் காகிதம் 36 பக்கம் விலை அணா 2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$ அணா தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

‘தமிழரசு’ புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

இரண சஞ்சீவி

இம்மருந்தை சேத்துப் புண்ணுக்குத் தடவலாம் சொரி சிரங்குகளுக்குப் பூசினால் குணமாகும். முகத்தில் காணும் மோகப் பருவுக்குத் தடவ முக வசீகரத்தைத் தரும்.

ஆராத மேகப்புண், மேகப்படை இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். மூல வியாதிக்கு மேல் பூசினால் மூல இரணங்கள் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—0—0.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசி யின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

புத்திர உற்பத்தியை யளிக்கும்



என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வர வழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையயும் பூர்த்தி

செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய
சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனைகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானுள். இரண்டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும் போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஸஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கி விட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லே. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,
7—5—32 கார்ட்டன் லூட்ராப் கம்பெனி, மதராஸ்.

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனுல் நான் எதிர் பார்க்காத வண்ணம்

குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே !

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு

28—4—33, காஞ்சிபுரம். Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

தைலாமிர்தம்

இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சாக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)

சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 4.

Rangoon,
Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases, as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully
E. K. Panchanatham,
c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.
Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினார். அவர் வார்த்தைக்கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றாம் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு.
அண்ணாவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அனேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,

கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,

சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

ச க ல மே க சி த் தா தி எ ண் ணெ ய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.



அயத்தங்க

திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எனும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனாதலால் விலை குறைவு செய்து அனுப்பினால் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் எஜண்டுமானாலு மாவேனாதலால் அதை யனுசரித்த அரை டஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினால் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.

தபால் கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.

மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்தல், பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் இவைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒரு மணத்தைக் கொடுக்கும். 4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து விலை ரூபா 2.

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை.

புட்டி 1-க்கு விலை அணா 8.

சென்னை-600 008

சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணா, மணியார்டர் கமிஷன் 2 அணா, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணா, ஆக 5½ அணா சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினால் ரூ. 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத்தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

வியாசம் எழுதுவோர்க்கு

'தமிழர்'சில் வெளியிட வியாசங்கள் அனுப்புவோர் தயவு செய்து பின் வரும் விதிகளைக் கவனித்தல் அவசியமாகும்:—

1. இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேச முண்டாக்கும் அரிய சரித்திரங்களும், நெஞ்சை அள்ளும் சிறு கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர்தர வியாசங்களும், சீர்திருத்த விஷயங்களும் அன்போடு அங்கீகரிக்கப்படும்.

2. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையினால் எழுதி அனுப்புதல் வேண்டும்.

3. எந்தக் கட்டுரையும் நான்கு அல்லது ஐந்து பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக இருப்பதே நலம். இத்தகைய வியாசங்களே முதன்மையாகக் கருதப்படும்.

4. அங்கீகாரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பவேண்டுமானாலும், அனுப்பிய கட்டுரைகளைப்பற்றி அபிப்பிராய மறிய வேண்டுமானாலும் அவற்றோடு தபால் தலைகளும் அனுப்ப வேண்டும்.

5. கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

"Tamil Arasu" Rgd. M. No. 2559

கார்டோலின்

ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.

விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

ஈளை இருமல், சுவாச காசம், காச இருமல், மந்தார காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத் முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.